REGD 4642 M

| | | |
|---|---|---|
| சந்தா விபரம்<br>—<br>1 ஆண்டு ரூ 7.<br>½ ,, 3 8 0 | # திராவிடநாடு | 16 பக்கம்<br>விலை<br>இரண்டணா |

இலங்கை 15 சதம் — மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 25–6–50 | இதழ் 52

## அமைதி நிலைநாட்டும் ஐ. நா. சபை!




அலங்கோலமாகிறது ஆதிக்க வெறியால்!

சிந்தனைத் திரை

# இளங்கோவின் சபதம்

**காட்சி 1.**

காலம்: மாலை.
இடம்: மன்னனின் தனியான மலர்க் காடு
இருப்போர்: சேரபூபதி இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், அவன் மக்கள்—செங்குட்டுவன், இளங்கோவன்,—நிமித்திகன்.

சேரலாதன்:- மக்களே, அதோ பாருங்கள், கதிரவனை!

இளங்கோவன்:- மஞ்சள் கதிர்களை வீசி மனதை மயக்குகிறான், மகிழ்ச்சியைத் தேக்குகிறான்.

செங்குட்டுவன்:- கதிரவனின் கடைசிப் பார்வையின் காந்த ஒளிதான் அது!

சே:- ஆம், மகனே, கடைசி ஒளிதான் — கதிரவனின் யாத்திரை முடிகிறது, என்னைப்போலவே!

இ:- அப்பா, என்ன புதிர் போடுகிறீர்கள்?

சே:- புதிர் அல்ல, புரியாத போதனையுமல்ல! என் வாழ்வின் காலைப் பொழுது போய், மாலையும் வந்து விட்டது. இனி இறப்பெனும் இரவுதான் வரவேண்டும். அதுவும் வந்துவிடும் வெகுவிரைவில்! கணத்திற்குக் கணம் அந்தக் கடைசி பயணத்தை எதிர்பார்க்கிறேன்.

செ:- சாவின் வரவினையும், செல்கையினையும் புலியாள்வோராயினும் புரிந்து கொள்ள முடியுமா, தந்தையே?

சே: முடியாதுதான் செங்குட்டுவா, ஆனாலும் என் வயதும், அதனால் ஏற்பட்டுள்ள உடல் வாட்டமும், உள்ளத் தளர்ச்சியும் முன்னெச்சரிக்கையாக இரு என்று எனக்கு அதட்டி அதட்டிக் கட்டளையிட்ட வண்ணம் உள்ளன. ஆகவே, [illegible] மன்னர்களாகிய உங்களோடு தனித்துரையாடவே இங்கு வந்தேன்.

இ:- அழகு கொப்பளிக்கும் இந்த அந்தி நேரத்தில், அவசியமில்லாத சாவைப்பற்றிச் சர்ச்சை ஏன்? ஆராய்ச்சி ஏன்? தந்தையே, அதோ பாருங்கள், செக்கச் சிவந்து அதன் வனப்பில் நம்மைச் சொக்கவைக்கும் பரந்த வானத்தை! பவளக் கடலில் குளிக்கும் பளிங்குஉருண்டையெனக் காட்சிதரும் கதிரவனை! இருளும், ஒளியும் சந்திக்கும் இந்தப் பொன்னான நேரத்தில் பூத்துக் குலுங்கிப் பூரித்தாடும் மலர்க்கொடிகளை! இதய எண்ணங்களைப் படம்பிடிக்கும் இளம் முகத்தை ஒக்கும் இந்த வண்ணத் தடாகத்தை! தலைவனைக் காணாத தலைவியைப்போல, தலையைத் தாழ்த்தி, தன் ஒளி முகம் சுருக்கி, ஓவியருக்கும், காவியம் புனைவோருக்கும் தெவிட்டாததேன் தோற்றத்தைத் தரும், தாமரையை! சிரிப்பை சிந்தும் அல்லியை!

செ:- தம்பி, என்ன கவிமழை பொழிகிறாய்!

இ:- ஆம் அண்ணா, நான் கவியாகப் போகிறேன்.

சே:- அப்படியானால் இப்புவியின் கதி?

இ:- இக் கேள்விக்கு விடை தர வேண்டியவர் என் அண்ணன்!

சே:- மூத்தவன் முடி புனைவது முறை — அறம் என்றாலும், இளங்கோ, காவலன் வழிவந்த நீ, காவியம், ஓவியம் என்று நாட்டை மறந்து, நாவலர், பாவலர்போல, ஏடெடுத்து, பாட்டெழுதி, பதவுரை பகர்ந்து, விழுப்பொருள், கருப்பொருள் பேசி, பொழிப்புரை, கருத்துரை வழங்கிக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா?

செ:- ஆம், தம்பி! ஆளப்பிறந்தவன் நானாக இருக்கட்டும். அதற்காக அண்ணனை விட்டுத் தம்பி தனி வழி நடக்க வேண்டுமா?

சே:- ஒரு நாட்டிற்கு முடிசூடும் மன்னனும் வேண்டும் — இன்னும் எதிரியின் இதயத்தைச் சுவைக்கும் ஈட்டியை, பளபளவென ஒளிவிடும் வாளை, கேட்டவர் கிடுகிடுத்து நடுங்கும் ஓசையை வெடிக்கச்செய்யும் கேடயத்தைத் தாங்கி நடக்கும் சேரர் படைக்கு ஒரு சேனாதிபதி அவசியமல்லவா? கடகட, தடதடவென ஓடி எதிரிப் படையைக் கண் திறப்பதற்குள் கலங்கடிக்கும் குதிரைப்படையைக் கட்டியாள ஒரு வீரன் வேண்டாமா? யானைச் சேனையை, தேர்த்தானையைக் கவனிக்க ஒரு தளபதி தேவையாயிற்றே!

இ:- என்னைவிட அண்ணன் இப்போர்த் தொழிலில் கைவந்தவர்— அப்பணிகளுக்கு ஏற்ற நல் வீரர்களைத் தெரிந்தெடுப்பார் அவர் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது!

செ:- படையிருக்கட்டும் — நிதியில்லையா? மதிமிக்கவர் கூடவேண்டிய மந்திரி அவையில்லையா? அதில் ...............

சே:- இளங்கோ, அண்ணனுக்கு அறிவுரைதரத் தயக்கம் ஏன்? மன்னன் மனமயக்கமடைகிறபொழுது உன் மணிமொழியால் தெளிவு பிறக்கச் செய்யலாம்.

செ:- நிதி நிலைமையை விளக்கும் நிபுணனாகலாம். நீதிகளைச் சொல்லித் திருத்தும் மதியூக மந்திரியாகலாம். வெளியுலகச் சூழ்நிலையை விளக்கும் வித்தகராக இருக்கலாம். உணவைப் பற்றிப் பேசலாம். உடையைப்பற்றிச் சொல்லலாம். ஊராளும் முறைகளில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தக்க வழிகளைக் காட்டலாம்.

இ:- கவியாக வேண்டும் என்ற ஆசையை அளவிற்குமேல் வளர்த்து விட்டேன், அண்ணா! என் ஆவித் துடிப்பொவ்வொன்றும் காவியம் இயற்று என்றுதான் கூவி ஒப்பேறுகின்றது. ஆகவே, தங்கள் உரைகளை என் செவிகளேற்கா!

சே:- நீ கவியாகவே இருந்தால்

கொள்ளவில்லை! இந்த அவனியைக் கட்டியாளப் போகும் உன் அருமை அண்ணனின் அருகிலேயே இரு—மகனே, இது உன் வயதான தந்தையின் விண்ணப்பம்—சாவின் தாழ்வாரத்தில் தள்ளாடி நடந்திடும் குடு குடு கிழமான உன் அப்பனின் வேண்டுகோள். இது உன் அன்புத் தாய் நற்சோனையின் விருப்பமுங் கூட! தள்ளிவிடாதே, என் அந்திய கால ஆசையை! மறுக்காதே மகனே, ஏற்றுக்கொள்.

[இளங்கோவின் முகம் வாடி விடுகிறது. செங்குட்டுவன் ஆர்வத்தோடு தம்பியின் முகத்தைப் பார்க்கிறான்.]

இ:- ஆகட்டும் அண்ணா, அஞ்ச வேண்டாம்! தங்கள் விருப்பம்போல் நடப்பேன், தந்தையே!

சே:— சிறிது நேரத்திற்கு முன் ஏறி வந்தோமே......

செ:— தங்கத் தேர்

சே:— அதற்கு...

இ:— இரண்டு சக்கரங்கள், அதைப்போல சேரநாட்டுத் தேருக்கு இரண்டு சக்கரங்களாக எங்களை இருக்கச் சொல்லப் போகிறீர்கள்—அப்படித்தானே, அப்பா!

சே:— நீ அறிவாளி—மகனே அதைத்தான் சொல்ல நினைத்தேன். அதுமட்டுமல்ல, இழுத்து வந்த புரவிகளும் இரண்டு! அதுபோல இரண்டு சக்திகள் வேண்டும் நாடு நலமடைய! தேர் உருண்டு வர இரண்டு சக்கரங்கள்—நாடு நல்ல முறையில் நடந்திட வீரம் வேண்டும், விவேகம் வேண்டும்! வீரத்தின் உருவம் இதோ செங்குட்டுவன்—விவேகத்தின் வடிவம் இளமை துடிக்கும் என் இளைய மகன் இளங்கோவன். உங்களைப் பார்க்கிற பொழுது பூரித்துப் போகிறேனடா, நான்! என் இதயம் ஓங்கி எழுகிறது. தோள்கள் வீங்கிப் புடைக்கின்றன. ஆம், என் மக்களே, உங்களுக்குச் சொல்கிறேன். ஓடும் புரவிகளைப் போல ஒற்றுமையாக ஒரு திசையில் குறுக்கிட்டுக் குதர்க்கம் விளைக்காத பாதையில் நடந்திட வேண்டும். இல்லாவிட்டால், நிர்வாகம் நிலைகுலையும்!

செ; இ:— ஆகட்டும், தந்தையே.

[இப்பொழுது நிமித்திகன் உள்ளே வருகிறான். ஓசை கேட்டுத் திரும்புகின்றனர் மூவரும்]

நிமித்திகன்:— நமோ, நாராயண! நமோ, நாராயண!

சே:— வருக, வருக!

நி:— நமஸ்காரம்.

சே:— நலமா?

நி:— தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து இப் பொல்லா உலகைப் பொன்னுலகமாகத் திருத்தி, எல்லோரையும் நல்லவராக்கி, இன்பம் கொழிக்க, வாழ்வு செழிக்கச் செய்ய ஆண்டவன் அருள்புரியட்டும்.

சே:— இங்கு வந்த நின் நோக்கம்?

நி:— தங்களை வாழ்த்த, ஆசிர்வதிக்க! வேறொன்றுமில்லை-புரிநூலருக்கு வேதம் விதித்த வழி இது தானே—அதன்படி வந்தேன். போகிறேன்.

[நிமித்திகன் திரும்புகிறான். இளவரசர் இருவரையும் முடி முதல் அடிவரை நெடிது நோக்குகிறான். மன்னனின் மக்கள் வெறுப்புடன் பார்க்கின்றனர், வந்த நிமித்திகனை!]

இ:— புரோகிதரே, முடிந்ததா உம் வேலை — போய் வருகிறேன் என்று விடைபெற்றும் போகாமல் வெறிக்க வெறிக்க ஏன் எங்களைப் பார்க்கிறீர்?

நி:— வருநாள் மன்ன, தங்களின் பொன்னவிர் மேனி என்னைத் திகைக்க வைத்தது. நின்றுவிட்டேன், என் நிலை மறந்து!

இ:— அடடா, வரும் பொருள் உரைக்கும் திறன், ஆண்டவனருளால் அடைந்தவர் என்ற பெருமை உமக்குண்டே! தவறிவிட்டீரே... உம் சோதிடம் சோரம் போய்விட்டதே! உம் வேதம் வீழ்ச்சிக் குழியில் விழுந்துவிட்டதே! ஆளப் போகும் அண்ணன் அருகிலே இருக்க, என்னை எதிர்கால மன்ன என்று கூறிவிட்டீரே! உம்மை நிமித்திகன் என்று வேறு அழைக்கின்றனரே! எதிர்காலத்தையும், அறிந்துரைக்க முடியும் என்பதெல்லாம் பித்தலாட்டந்தானே!

நி:— அரச புத்திர... அவசரப்பட்டு அதிகம் பேசுகிறீர்கள்! ஆளப் போவது தாங்கள்தான். ராஜயோகம் தங்களுக்கிருக்கிறது — ஆண்டவன் விதித்த விதி அப்படி!

[நிமித்திகன் தான் தவறி, ஆள் மாறி ஆசிர்வதித்துவிட்டதை புணர்ந்ததும் திரு திருவென விழித்துச் சமாளிக்க முயற்சித்தான். செங்குட்டுவன் முகம் சிவந்துவிட்டது—கோபத்தாலோ, பொறுமையாலோ? இதைப் புரிந்து கொள்கிறான் இளங்கோவன்.]

இ:— நிமித்திகரே, நிதானித்துப் பேசும். மூத்தவர் இருக்க முடி தரிப்பான் இளையவன் என்று கூறுகிறீர். எங்கள் அரசர் குல நெறிக்கே இது நேர்மாறு!

நி:— சோதிடம் சொல்வதை நான் ஒலிபரப்புகிறேன்! தாங்கள் மன்னர் குலம்—நானோ புரிநூலையும், புற்கட்டையும், புத்தக மூட்டையையும் நம்பி வாழும் பூசுர குலம்—என்னிடம் சினங் கொள்வது தருமமா?

சே:- இளங்கோ, மறையவர் பெரியவர்—வயதில், படிப்பில், அனுபவத்தில், குலத்திலுங்கூட! அவரிடம் வாக்குவாதம் ஏன்?

இ:— தந்தையே, கொஞ்சம் பொறுமையாக இருங்கள்! இந்த நிமித்திகரின் நிபுணத்துவத்தை நான் ஒரு கை பார்க்கிறேன். இவர்களின் சாத்திரம் எனக்குத் தெரியும். அது கூவிடும் சேவலுடைய கொக்கரிப்புகளின் தொகுப்பு-இவர்களின் வேதம் ஒரு வரட்டு வாய்ப்பாட்டு!

செ:— வேதியரிடம் வீண் வம்பு ஏனடா, தம்பி.

இ:- வம்பில்லை அண்ணா, அவர் வாய்த் துடுக்குக்கு ஒரு ஆப்பு—அவ்வளவுதான்! நிமித்திகரே, ஆளப் போவது நான்—அப்படித்தானே?

நி:— ஆம், அப்படி நான் சொல்லவில்லை. சோதிடம் சொல்கிறது!

இ:— நான் ஆளாமல் போய்விட்டால் உமது சோதிடம் பொய்த்துவிட்டது என்றுதானே அர்த்தம்!

நி:— ஆம்...

இ:- உம் வார்த்தைகள் அத்தனை

யும் வடிகட்டின பொய்யென்று நாட்டிற்குச் சொல்ல இன்று முதல் நான் காவியேற்கிறேன்—துறவியாகிறேன்! ஆம், நாட்டின்மீதுள்ள ஆசையை மட்டுமல்ல, இந்த நாநிலத்தின் மீதுள்ள எப்பொருள் மீதும் ஆசை வைக்கப் போவதில்லை—காவியுடையுடன் கவியாக உலவுவேன்.

சே:- வீண் வார்த்தைகள் விபரீதத்தில் கொண்டுவந்து விட்டன. மகனே, துறவுக் கோலம் ஏனடா உனக்கு?

செ: — ஆகாதடா, உனக்கு இந்த இளம் வயதில்!

இ:— நிமித்திகரே, வெளியேறும்! என்றாவது ஒரு நாள் என்னைச் சந்திக்கும்பொழுதுமட்டும் என்னிடம் மன்னிப்புக் கேட்பீர், நிச்சயமாக!

[நிமித்திகன் திருட்டு விழி விழித்துக்கொண்டே வெளியேறுகிறான்.]

செ:— தம்பி...

இ:— அண்ணா, பதட்டம் வேண்டாம். காவியுடையுடன் காட்டிலிருந்தாலும், தங்கள் நலத்தில் கண்ணுங் கருத்துமாக இருப்பேன். நாம் மூவர் இங்கு கூடியதும், நம்மை நிமித்திகன் நாடியதும், பொய்யான புகழுரை பாடியதும், நான் காவி தேடியதும், பிறகு அந்தப் பொல்லாங்கு பேசிய பூசுரன் ஓடியதும் எல்லாம் ஒரு இன்ப நாடகத்திற்குச் சிறந்த முன் நடவடிக்கை! துறவியாகிறேன் என்று சூளுரைத்தது, ஒருவேளை......எங்கே மண்ணாசை அடிமைகொண்டு, இந்தப பஞ்சாங்கத்தின் பிதற்றல் மெய்யாகி விடுமோ என்ற சந்தேகத்தால்தான் —சஞ்சலம் விடுங்கள்!

செ:- யார் ஆண்டாலென்ன? இதற்கு ஏன் இந்த அலங்கோல சபதம்?

இ:- அதனால்தான் நீங்கள் ஆளுங்கள் என்கிறேன்.

சே:- உன்னிடம்பேசி யார்வெல்ல முடியும்? உன் அறிவு காட்டும் வழி நீ நட!

[மூவரும் தேரேறி அரண்மனை நோக்கிச் செல்கின்றனர்]

காட்சி . .

காலம் — மாலை

இடம் — ஊர் பொது மண்டபம்.

இருப்போர்-: ஊரிலுள்ள பெரியவர்கள், அறிஞர்கள், காவலர்கள், பாவலர்கள், கலைஞர்கள், புலவர்கள், வீரர்கள், நிமித்திகன்.

புலவர்:- இரண்டும், இரண்டு மாண்!

அறிஞன்:- வைரமணிக் குண்டுகள்தான்!

பு:- அண்ணனும், தம்பியும் இப்படியல்லவா அமையவேண்டும்!

அ:- ஆம், ஐயா, ஒருவர் நாடாள்கிறார், மற்றவர் நாவலர் உலகிற்கே காவலராக இருக்கிறார்.

கலைஞன்:- புவியாள்கிறார் ஒருவர், கவியாள்கிறார், மற்றொருவர்!

பு:- இந்த மாநிலத்துச் சரித்திரத்தில் எத்தனையோ மன்னாதி மன்னர்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால்............

வீரன்:- சேரன்செங்குட்டுவனைப் போலக் கண்டதில்லை — கேட்டதில்லை!

பெரியவர்:- நம் நாட்டைப்பழித் பேசினார்களாம், சில வடநாட்டு வாயாடிகள்! இழித்துரைத்தார்களாம், அந்த அழிவை நோக்கி விரைந்தோடிக் கொண்டிருந்த வீணர்கள் ஆரிய மன்னர்கள்!

வீ:- உடனே, புறப்பட்டுவிட்டாரே, போருக்கு!

பு:- போரா அது, பூவுலகமே பொன்னால் பொறித்துப் போற்ற வேண்டிய அருமையான நிகழ்ச்சி — அற்புதச் சம்பவம்!

பெ:- அந்த வாய்க்கொழுப்பு மிகுந்த வடநாட்டு மடசடலங்கள் வீரத்தாய்க் கண்ணகிக்குக் கோயிலெடுக்கக் கல் தூக்கிவந்தார்களே, இந்த அவனி முழுதும் சிரிக்கச், சிரிக்க! கேலியும், கிண்டலும் பேசி அவர்களை வீரர் உலகு வெகுநாள் வரை விலா வலிக்கச் செய்ததே!

க:- கண்ணகிக்கு, இமயத்துக் கல்தான் ஏற்றது — அதுவும் முடிமன்னர் சுமந்து வருவதுதான் பெருமை!

பு:- அண்ணன்தான் அப்படி— தம்பி எழுதிய காவியம்.........

அ:- தமிழன்னைக்குத் தக்கதோர் மணியாரம், அவர் எழுதிய ஒப்பிலா காப்பியம்—சீர்மிகு சிலப்பதிகாரம்.

பு:- அதில் முத்தமிழும் சேர்ந்து தித்திப்புச் சமுத்திரமாகி விட்டதே!

பாவலன்-: பாவினிமை முழுதும் அதில்பரவி விரிந்து கேட்பவர் செவியில் செந்தேன் பாய, சிந்தையில் சர்க்கரைச் சாறு ஓடச் செய்கிறதே!

பு:- நாடகக் காப்பியம் என்று புகழ்கிறார்கள் — கூத்துக்கு இதுவரை இருந்த குறையினைப் போக்கி விட்டதே!

காவலன்:-சொல்நயத்தை.பொருள் நுட்பத்தை, கருத்து திட்பத்தை என்னென்று புகழ்வது! வருணனை செய்ய வார்த்தைகள் கிடைக்கவில்லையே!

அ:- தாயகத்தின் பெருமைக்கு அவர் இயற்றிய காவியம்தான் நாயகமாகிவிடும், இனிமேல!

பு:- சிலப்பதிகாரம், செந்தமிழ் நாட்டிற்கோர் ஈடு இணையற்ற காப்பியச்சிகரம்! கருத்துச் சுரங்கம்! கற்பனைக் கருவூலம்!

[நிமித்திகன் வருகிறான்]

நி:- என்ன, இப்படி ஓரே, குதூகலம்! கூட்டம் தாங்கமுடியவில்லையே!

பு:- காவியப் பூபதி, சிலப்பதிகாரம்செய்த செம்மல் இளங்கோவடிகளைக் காணப் போகிறோம்.

நி:- எதற்கு?

பு:- அறிவுலகத்தில் அவர் அடைந்துள்ள அழியாத புகழுக்கு எங்கள் பாராட்டுதலைத் தெரிவிக்க!

வீ:- என்ன நிமித்திகரே, பேந்தப் பேந்த விழிக்கிறீர்...ஊரிலேயே இல்லையா? குடிமக்கள்மட்டுமல்ல, சேரபூபதி செங்குட்டுவரும், வருகிறார், இன்று தம் தம்பியைப் பார்க்க!

நி:- ஓகோ.........

[நிமித்திகன் நழுவி விடுகிறான்]

பெ:- நேரமாகிவிட்டது. எல்லோரும் புறப்படுங்கள். போய்ப் பார்ப்போம் நம் இளங்காவியச் சக்ரவர்த்தியை, ம் ஆவியோடு கலந்து போன அரசர்குல பாவலரை!

(13-ம் பக்கம் பார்க்க)

கூவத்தாரே, கூவாதீர்!

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

மரங்களாய்' உலவுவோர் வாழுமுயல்வது பிடிக்கவில்லையா—இந்த 'வைர மோதிரச் செருக்கு! கணையாடு மெத்தையை வீசுகின்றனர்—வாசிட வக்கீலாண்டு என்று கூப்பாடு வேறு தொடர்கின்றனர்!!

'கூவத்திட்டப்' சொத்துபல்லி வாசனையைய எதிர்பார்க்கலாமோ என்று கேட்கிறாயா? இவை 'கூவமாக' இருந்திருந்தால், சே, ஒதுங்கு என்று தள்ளியிருப்பேன்! ஆனால் கோமான்களாகவும் சீமான்களாகவும் அகில உலகுக்கே அறிவுரை தரும் ஆசான்களாகவுமல்லவோ இருக்கின்றன—ஆகவேதான் சொன்னால் புரியும் என்று நினைத்தேன்—ஆனால குருடனிடம்போய் கோலநிலாவின் அழகு தெரியுமோ என்று கேட்பது போல இருக்கிறது எனக்கில்லை!"

X X X

இவ்வளவு வீராவேசத்தை என்றுமே கண்டதில்லை நண்பன் நல்லானிடம்— திகைத்துப் போனேன். ஏனெனில், அவன் ஒரு தேசியவாதி —அது மட்டுமல்ல, நாம்போன்றாரை வாயில் நரம்பில்லாமல் திட்டிப் பேசுவதே தேசசேவை என்று கருதும் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவன்—கொஞ்சம் தீவிரவாதியும்கூட. அவன் இத்தகைய அனல் மொழிகளை வீசுவது கண்டு எனக்கே ஆச்சரியமாயிருந்தது—ஆரம்பித்தவன் விடவேயில்லை, ஒரே ஆத்திரத்துடன் பேசினன்! அதில் ஒரு பகுதிதான் மேலே இருப்பது!

X X X

கோமுசுவரனுகிக்கொண்டிருக்கும் கூவத்து 'இந்து'வும், பத்திரிகா தர்மத்துடன்பணிபுரிவதாகப் பறைசாற்றும் 'மித்திர'னும், சந்து எங்கே இருக்கிறது நுழைய எனச் சந்தர்ப்பம் தேடும் சனுதன 'விகட'னும், அதிர்வேட்டுப் போடுவதும் அடங்கி விடுவதுமே தனது வேலையெனக் கொண்ட கீழ்ப்பாக்கம் 'கல்கி'யும், இன்னும் சில சில்லரைகளும் சிங்கநாதம் செய்கின்றன—அதைக் கண்டு தான் நண்பன் நல்லானுக்கு ஆவேசம் வந்திருக்கிறது. அவனுக்கு மட்டும் என்றல்ல, தேசிய 'தினசரி' கதராடை 'காண்டீபம்' ஆகியவைகளுக்கும் ஆத்திரம், கோபம், கொதிப்பு, அத்தனையும் கலந்த ஆவேசம் உதயமாகி இருக்கிறது! 'எனிந்த வக்கிரபுத்தி' என்று வீராவேசமாகக் கேட்கிறார் தினசரி. 'விதண்டாவாத வெறியர்களே' என்று வேக வார்த்தைகளால் அர்ச்சிக்கிறார் காண்டீபத்தார். நல்லானது ஆத்திர மொழியையும் 'தினசரி', 'காண்டீப' ஆகியவைகளின் தீமொழிகளையும் கண்டபொழுது நமக்கு ஆச்சரியம் எழும்பவில்லை!

'உயிர் போயினும் உரிமை பெறத் தயங்கோம்' என்ற உணர்ச்சிக்கீதம் இவர்கள் இதயத்தில் எழும்பி, பேனவின்மூலம் உருவெடுத்து இருக்கிறதே என்ற பெரு மகிழ்ச்சியே உதயமாகிறது!

வர்ணாச்சிரம தர்மம்! — நாட்டில் நாலாயிரம் சாதிகளைச் சிருஷ்டித்து விட்டது. உழைக்காமல் வாழ்பவன் மேல் சாதியென்றும் உழைத்து அலுப்பவன் கீழ்சாதி என்றும் அகோரப் பிரிவை மக்களிடையில் ஏற்படுத்திவிட்டது.

விளைவு — வெயிலே இருப்பிடமாய், வேதனையே வாழ்க்கையாய், பசியே துணையாய்ப், பட்டினியே நண்பனாய்ப் பரிதவிக்கும் கூட்டம் ஒருபுறம்! மாடு மேய்க்கவும், மண் வெட்டி தூக்கவும், சாணி எடுக்கவும், வீடு பெருக்கவும், வேலைக்காரியாகவும் இருக்கவும், வேதனைப்படவுமான மக்கள் ஒருபுறம்! ஜோரான வீடு, குஷாலான பேச்சு, அழகான உருவம், அசையாத நிலை, இன்பம்! இன்பம்!! என்று எக்களிப்பார் இன்னொரு புறம்! கார்காலமேலமர்ந்த வண்ணம் நாடாளவும், நல்ல உத்தியோகஸ்தர்களாகவும், மேனி குலுங்காது ஒய்யார வாழ்வு வாழ்வோர் இன்னொருபுறம்!

இந்த உழைப்பவன் — உழைக்காதவன் என்ற இரு ஜாதிகள் உருவாயின—வர்ணாசிரம தர்மத்தால், வஞ்சனையே தன் வழியெனக் கொண்ட மதவெறியால்!

இந்த உண்மை நிலையை எவரும் மறுக்க முடியாது—காமாலைக் கண்ணன், கருத்துக் குருடன், கபட வேஷம் போடுபவன், காசுக்குத் தன்னை அடிமைப்படுத்தியவன் ஆகியோரைத் தவிர!

வாழப் பிறந்த மனித சமுதாயத்திலே வஞ்சனையாளர்களால் இந்த இருசாதிகள் ஏற்படலாயின—ஏராளமான புதுச்சாதிகள் புற்றீசல்போல நாட்டு மக்களிடையே உலவலாயின! வாழ்ந்தவன்—தாழ்ந்தவன் எனக் கூறப்பட்டான்! ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோன் தான் சிருஷ்டித்த உபதேசங்கள், விளக்கங்கள் மூலம் பகுத்தறிவைக் கொள்ளை கொண்டு, தன் படாடோபவாழ்வுக்கான பாதையை வகுத்துக்கொண்டான்!

முரசு கொட்டி வாழ்ந்தவன், 'ஐயா இங்கே பாரும், ஆளுக்கொரு கவளம் தாரும்' என்று தாளம் தட்ட வேண்டியவனானான்—'தாஸன்' ஆக்கப்பட்டான்!

சூழ்ச்சிக்கு ஆட்பட்டு தன் சொந்த நிலை மறந்து, துயர பிம்பமாக ஆனேரை என்றும் அடக்கி, அடிமைப்படுத்தச்சூழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டது. தாழ்ந்தவன் என்ற பட்டம்—தகுநிலை பெற முடியாதவன் என்ற இழிசொல் வீரத்தைத் தன் கீதமெனக் கொண்டு, வெற்றியே தன் முரசமென ஆர்த்து அழகு கொழிக்க வாழ்ந்தவனுக்குச் சூட்டப்பட்டது.

விதி என்ற விலங்கு, சாதி என்ற சதி, கடவுள் என்ற மிரட்டல், நரகம் என்ற நம்பிக்கை—தாழ்ந்தவனைத் துயரப் படுகுழியில் தள்ளிவிட்டன. தத்தளித்தான், தவித்தான், இருட்டுக் குழியிலிருந்து வெளியேற இயலவில்லை—தடினாலும் தட்டுப்படவில்லை வெளியேறும் பாதை! விளக்கு வெளிச்சமோ அவன் பெறமுடியாததாக்கப்பட்டு விட்டது — காட்டு உரைகளின் மூலம்!

எனவே, கல்வியென்ற ஒளி, கருங்குழியில் கிடந்து கஷ்டப்பட்டவனுக்கு எட்டமுடியவில்லை!

காய்ந்துபோன வயலாயிற்று, வாழ்ந்து வீழ்ந்த மரபினரின் வாழ்வு! நீரோடையோ, காய்ந்து கருகும் வயலுக்குத் திருப்பிவிடப்படவில்லை.

கல்விநீரோடை, தாழ்ந்த சாதிக்காரரானேரின் பக்கம் பாயவில்லை—விளைவு, கல்லாதவர், கசடர் மிகுந்தனர்!

தாழ்ந்த சாதி ஆக்கப்பட்டோரின் மொழியும் சூறையாடப்பட்டது. ஏற்றம் பெற்றோர் தங்களது வலைக்குள் எல்லோரையும் வீழ்த்தத்திட்ட

மிட்டனர். பசுப்போல் வந்து புலியென மாறிப் பொல்லாங்குசெய்வது போலத் தங்கள் போக்கை மாற்றிக் கொண்டனர்!

மேட்டுக்குடியினர்-வாழ்ந்தவரின் மொழிக்குப்பதில், தங்களது மொழியைப்பரப்ப முனைந்தனர். சாதியில் தாங்களே உயர்ந்தவர்கள், அதைப் போல தங்கள் மொழியே உயர்ந்தது, கடவுளுக்குப் பிரீதியான மொழி என்று கூறினர் — அதை நிலைநாட்டவும் முயன்றனர்!

வாழ்ந்தவரிலே, வளைந்த முதுகினர் 'வந்தவர் கூற்றை' நம்பினர்—ஏற்றனர்—கொண்டாடினர்! எனினும் கன்னித்தமிழ் கரைந்துவிடவில்லை! இறந்தொழிந்து போய்விடவில்லை!!

* X *

உயர் சாதியினரின் சூதுமதியால் தாழ்ந்தவனுனோன் கல்வி நீரோடையின் பக்கலிலும் ஒதுங்காமல் தடுக்கப்பட்டான் — சாஸ்திரங்கள் மூலம். உயர் சாதியினரின், வெறியால் தாழ்ந்தவன் மொழியைத் தரைமட்டமாக்கச் சதி செய்யப்பட்டது — தங்களுடையது 'சிறந்தது' என்று வர்ணிக்கப்பட்டு!

இந்த முயற்சிகள் வாள் கொண்டோ அல்லது வேல் தாங்கியோ பரப்பப்பட்டிருந்தால் — வீரப்பரம்பரையினர் எதிர்த்து சுக்குநூறாக்கியிருப்பர்! ஆனால் இந்தச் சூதுத்திட்டங்கள் சாதுர்யமாக நிறைவேற்றப் பட்டன! பாலிலே நஞ்சு, திடீரெனக் கொட்டப்படவில்லை! பாம்பு, பசுவை வந்தவுடன் கடித்துப் போடவில்லை! நரி, புலியை எதிர்த்து வெற்றிபெற முனையவில்லை!

நல்லவர் போல உலவினர்—கலந்தனர்!—வீழ்த்தினர்!!

'தாழ்ந்த சாதிக்காரன்' என்ற இழிசொல்லை, புது மகுடம் என்று போற்றிக் கொண்டாடிய 'விபீஷணர்கள்', வீரப் பரம்பரையின் வீழ்ச்சிக்கு காரணமாயினர். நரி — புலியைக் கொண்டே புலியை வீழ்த்திற்று!

தாழ்ந்தசாதிக்காரனை, தலையெடுக்காவண்ணம் சதிசெய்து வெற்றிபெற்றது — அவன் மொழியைச் சிதைக்கப் பாதை கண்டு அதில் புகுந்தது!

இப்போது, தனது எதேச்சாதிகார முறைகள், தவிடுபொடியாவது காண இந்த 'இரும்பு நெஞ்சங்களுக்குப்' பொறுக்க முடியவில்லை! வாழமுடியாது வழுக்கி விழுந்தவன் வகையுடன் வாழவும், உயர்ந்த சாதிக்காரனைப்போல் உத்தியோகங்கள் பெறவும், உடைநத்தையுணரவும் முற்படும்போது முணகுகின்றனர்! தங்கள் இடத்துக்கு இந்தத் "தாழ்ந்தவர்கள்" வருவதா என்று சல்லடம் கட்டுகின்றனர்!

கல்லூரிகளிலும் சர்க்கார் உத்தியோகங்களிலும் எல்லா வகுப்புகளுக்கும் சம நீதி வழங்கும் முறையில் கையாளப்படும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் 'இதுகளுக்குப்' பிடிக்கவில்லை!

சமஸ்கிருதத்துக்கென தனிச் சலுகை தந்து மாதவமேனன் பிறப்பித்த உத்தரவு-மக்கள் எதிர்ப்பால் — ஒத்திப் போடப் பட்டிருப்பது காணப்பொறுக்க முடியவில்லை!

பொங்கும் கடலைப்போல 'கூவத்தாரும்' அவரைச்சார்ந்த ஏடுகளும் ஒரு குரல் அழுதிருக்கின்றன — மேற்படி விஷயங்களைக் குறித்து!

கூவத்துக் கோஷ்டியினர் அரசாங்கத்துமீதே சீறியிருக்கின்றனர்- வாள் எடுத்துக்கொண்டல்ல, பேனாவின்மூலம்!

"பத்திரிகை உலகம்" தங்களது ஏகபோக உரிமையாக இருக்கிறது என்ற எண்ணத்தால், சீறறத்தையும், கோபத்தையும் வீராவேசமாகக் கொட்டியிருக்கின்றனர்!

ஆளவந்தாரோ, 'இதுகளின்' கருணைபார்வைக்கு ஏங்கிக் கிடக்கும இதயத்தவர் என்பது நன்குதெரிந்த காரணத்தால இந்தக் காகிதப்புலிங்கிகள் — கர்ஜனையென எண்ணிக் கொண்டு, கத்துகின்றன!

வகுப்பு நீதி வழங்குவது பிடிக்கவில்லையாம்!

சமஸ்கிருதத்துக்குத் தனி இடம் ஒதுக்காததுகாணச்சகிக்கவில்லையாம்!

குழந்தை பாலுக்கு அழ, குட்டிச் சுவரில் கொட்டக் கொஞ்சம் பால் கொடு என்று கேட்டாளாமே ஒரு கோதை! அதையும் மின்சுகிறது இதுகளின் ஓலம்!!

'கூவத்துக்கோஷ்டி'யின் இக்கூக்குரலைக் கண்டதன் விளைவாகத்தான் நல்லான் என்னிடம் தலைப்பில் தந்ததுபோல வீராவேசமாகப் பேசினான்.

"நல்ல சவுக்கடி! பார்த்தாயோ, 'காண்டீபம்' 'தினசரி' தீட்டியவைகளை?" என்று கேட்டான் என்னை.

"பார்த்தேன்— பரவசமடைந்தேன்" என்றேன் அவன் விட்டுவிடுவதாயில்லை, "வெறியர்கள் — வீண் பிடிவாதக்காரர்கள்—வேற்றுமையை வளர்ப்பவர்கள்......." தொடர்ந்து, முடிக்காமல் பேசலானான்.

"நல்லான், போதும்! யார் காதிலாவது விழுந்துவிடப்போகிறது"

"விழுந்தாலென்ன? உண்மையைக்கூறவும் அஞ்சவேண்டுமோ?"

"சரி, நல்லான், வகுபபுத்துவேஷி என்று சொல்லுவார்கள்"

"எது, அண்ணால், வகுப்புத்துவேஷம்? நான் பேசுவதா—இது எப்படி வகுப்புத் துவேஷமாகும்? நான் என்ன திட்டுகிறேனா—குத்துவெட்டுக்குக் கூப்பிடுகிறேனா- நீதி கோருகிறேன்-நியாயம்வழங்கப்படவேண்டுமென்கிறேன்"

"அதுதானே உன் ஆசை? பின் ஏன் அதே வார்த்தைகளைக் கூறும் எங்களை மட்டும் வகுபபுத்துவேஷி என்று தூற்றுகிறாய்?"

"அதா...? வந்து...நீங்கள் எப்போது பார்த்தாலும் ஒரு சாராரையே தாக்கிப் பேசுகிறீர்களே!"

"நீ இதுவரை பேசினாயே, இதற்குப் பெயர் தாக்குதலா?"

"எந்த முட்டாள் சொல்வான்?"

"அதையேதான் நானும் கேட்கிறேன்—நீ கூட வெதவேகமாகப் பேசினாய் ஆத்திரத்தில! நாங்கள் அவ்வளவு தூரம் கூடப் பேசுவதில்லை! எங்கள் கொள்கையென்ன தெரியுமோ மக்களாகப் பிறந்தோர் யாவரும் மக்களாக வாழவேண்டுமென்பதுதான். ஆனால் இந்த சமரசகீதம், சங்கடநாதமாகத் தென்படுகிறது—உனக்கு மட்டுமல்ல, நீ கூறினாயே அந்த 'கூவத்து கோஷ்டி'க்கும்! சமரசம் தழைத்தால், உயர்ந்தோன் — தாழ்ந்தோன் பேதமும், அதன் அடிப்படைமீது கட்டப்பட்டிருக்கும் சுகவாழ்வு மாளிகையும் நிலைக்காதல்லவா! ஆகவே தான்

(10-ம் பக்கம் பார்க்க)

# சுழல் விளக்கு

## ஆச்சரியமில்லை!

அமெரிக்காவின் மோகனவலை, ஆசிய நாடுகளின்மீது வீசப்பட்ட வண்ணமே இருக்கிறது. ஆனால் ஆசிய நாடுகளோ தொழில் துறையில் முன்னேறாமல் வறுமை வாழ்ந்திடும் 'வகை கெட்ட' நிலையிலிருக்கின்றன. ஏழ்மையும் இல்லாமையும் ஆசிய மக்களைப் பொதுவுடைமைப் பாதைக்கு இழுத்துச் செல்கின்றன. ஆசியாவிலுள்ள எல்லா நாடுகளிலும் கம்யூனிசம் பரவி வருகிறது. அதைக் காணும் அமெரிக்காவோ, கம்யூனிசத்தை எதிர்க்கக் கச்சை கட்டுகிறது. ஆயுதத் தளவாடங்களை அனுப்புகிறேன் என்று ஆர்ப்பாட்டம் செய்கிறது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அடிமைப்பட்ட சியாங்—கே—ஷேக் தோல்வியடைந்துவிட்டார்! இப்போது இந்தோசீனாவின் பொம்மைச்சர்க்கார்பாவோடாய்க்கு இந்த நப்பாசை தந்து வருகிறது அமெரிக்கா—'பொம்மை'களைத் தங்கள் நண்பர்களாக்கிக் கொண்டு அவர்கள் மூலம் ஆயுதத் தளவாடங்களை அனுப்பிக் கம்யூனிசத்தை எதிர்த்துப் போராடும் களமாக்க திட்டம் போடுகிறது! ஆசை நர்த்தனமாடுகிறதே யொழிய—கம்யூனிச வளர்ச்சி அதிகரித்துக் கொண்டு தான் உள்ளது! சூதுமதியுடன் தீட்டும் எத்திட்டமும் நிச்சயம் நீடிக்காது!

## நவீன ஆழ்வார் ஏற்பாடு!

என்ன போங்கள் ...... உலகம் போகிற போக்கைப் பார்த்தால் ஒரு குறை அழுது தீர்த்துவிடலாம் போலிருக்கிறது—அநர்த்தம் சம்பவித்துச் சர்வநாசம் வந்துவிடும் போலிருக்கிறது — பாருங்களேன்! ஐ. நா. சபையாம், ஐக்கிய நாட்டு, கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனமாம், அகில உலகத் தொழிற் சங்கமாம், உலக சுகாதார நிலையமாம்...அப்படி, இப்படியென்று உளறிடத்தொடங்கி விட்டார்கள், பைத்தியக்காரர்கள்! அகில உலகம் என்று பேசி ஆண்டவ பரீதியான காரியத்திலிருந்த அக்கறை செத்துக் கொண்டே போகிறது — மாண்டு, மாண்ட இடத்தில் புல் முளைத்துவிட்டது என்றுகூடச் சொல்லலாம்! புதிய ஆழ்வார், கிளம்பப் போகிறார் இந்தப் பொல்லாத நிலையைப் பொடிப்பொடியாக்க! திருப்பதி தேவஸ்தானக் கமிட்டித் தலைவர் வெங்கிடசாமி நாயுடுகாரு அவர்கள் இந்து மத கோடைகால பாடசாலையின் ஆண்டு விழாவிலே வெளுத்து வாங்கியிருக்கிறார். அமைக்கப்போகிறாராம், "ஸ்ரீ வெங்கடேஸ்வரா கமிஷன்" என்ற பெயரில், ஒரு பக்திப் பட்டாளத்தை! அவர்கள் சுழற்காற்றெனச் சுற்றிப் பிரசசாரம் செய்யப் போகிறார்களாம், ஏழுமலையானின் பிரபல்யத்தை சிறப்பாக, இந்து மதத்தின் மேன்மையைப் பொதுவாக! எப்படி, நவீன ஆழ்வாரின் திட்டம்—ஏழுமலையான் பிழைக்கச் செய்துள்ள ஏற்பாடு!

## ஷூமான் திட்டம்

ஐரோப்பிய நாடுகளின் கனத் தொழில்களை—உருக்கு, நிலக்கரி போன்ற பெரும் தொழில்களை—இணைக்கச் சொல்கிறார், ஷூமான். இந்தப் புதிய திட்டத்தின் பக்கம், உலகம் தன் செவிகளைத் திருப்பி விட்டன—கண்களை அகல விரித்துக் கொண்டன! அந்த இணைப்பிலே இன்பம் உண்டு, வளரும் நிலைக்கு வழியிருக்கிறது. உற்பத்திப் பெருக்கத்திற்கும் ஊதிய அதிகரிப்பிற்கும் ஏற்ற முறை இதுதான்...என்று அடுக்கடுக்கான காரணங்களை அள்ளி வீசுகிறார்—தள்ளிடும் நல்ல காரணங்களைக் கொள்ளை கொள்ளையாக வெளியே தள்ளுகிறார்! பிரஞ்சுப் பூமி பூரிக்கும், தங்கள் வெளிநாட்டு மந்திரியின் புத்திக் கூர்மையைக் கண்டு! ஷூமான் திட்டம், சூட்சமத்தில் மோட்சம் தேடுகிறது! ஐரோப்பிய நாடுகளை இணைத்திடப் பார்க்கிறார், தொழிலின் பேரால்! ஆனால் கம்யூனிஸ்ட் ரஷ்யாவை எதிர்க்க ஒரு பலமான முன்னணி அமைக்க முனைகிறார். சராசரி சிந்தனையுள்ளங்கொண்டவரும் புரிந்து கொள்ளலாம், இதனை! ஆகவேதான் அமெரிக்க அக்கிஸன் ஆதரிக்கிறார், பாராட்டுகிறார் ஷூமான் திட்டத்தை! ஆனால், அட்லி மறுக்கிறாரே! ஏன்? அதற்கும் காரணம் உண்டு. காமன்வெல்த் நாடுகளின் தொடர்பை அறுத்துக்கொண்டு ஐரோப்பிய இணைப்பிலே கலப்பதால் இழப்பு இங்கிலாந்திற்கு! ஆகவே, யோசிக்கிறார். மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை...என்பார்களே, அதுபோல அதன் நிலை! ஆகவே, ஷூமானின் திட்டத்தின் எதிர்காலத்தை நாம் திட்டவட்டமாகச் சொல்லத் தேவையில்லை. முடிவு, முறிவா, வெற்றியா என்று பொறுத்திருந்து பார்த்தால், புரிந்துவிடும், நம்யூகத்தின் உண்மை!

## வெறி பெற்ற வெற்றி!

நிறவெறியின் கோர தாண்டவம் இன்னும் ஓயவில்லை—அதன் ஆர்ப்பாட்டம் சாயவில்லை, மாயவில்லை! மலான் சர்க்கார், தான் நினைத்த இனமண்டல மசோதாவைப் பிடிவாதமாக நிறைவேற்றி விட்டது. எதிர்ப்பை துச்சமெனத் தள்ளி விட்டு, நாகரிக உலகின் கேலியையும் கிண்டலையும், ஒதுக்கிவிட்டு, மனித இதயத்தையே கழற்றி வைத்து விட்டு, மனச்சாட்சியை எறித்துவைத்து மிதித்துச் சாகடித்து விட்டு! தென் ஆப்ரிக்காவிலேவாழும் இந்தியரோ, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும், வேண்டுகோள் விடுத்தனர் — ஐ. நா. சபையாரிடம் இந்த அலங்கோலத் திட்டத்தை எடுத்துச் சொல்லுங்கள் என்று! இதைக்கண்டு மலான் மலைத்துவிடவில்லை மனம் மருண்டுவிடவில்லை — பிடிவாதமாக தீட்டிய திட்டத்தைத் துளியும்மாற்றாமல் நிறைவேற்றிவிட்டார். எனினும் மசோதா நிறைவேறிவிட்டாலும் அதனை அமுலுக்குக்கொண்டுவரும் நாளைத்தள்ளி வைக்க முயற்சி செய்ய பாகிஸ்தான், இந்தியாவைத் துணைக்கு இழுக்கிறது. ஐ. நா. சபை கூட்டும் வட்டமேசை மாநாட்டில் கலந்து முடிவுகட்டலாம் என்று நம்புகிறது. குதிரையைவிட்டுவிட்டு, லாயத்தைப் பூட்டுவதா என்று கேட்பர் பட்டிதொட்டியிலுள்ள, படிப்புக்கூடங்களின் படிக்கட்டுகளிலும் ஏறாத பாமரனும்! சரி, நிறவெறிக்கு இந்த நானிலம் தரும் தண்டனை தான் என்னவென்றுதான் பார்ப்போமே.

திராவிட நாடு

ஞாயிறு] 25—6—50 [காஞ்சி

# 'கோதுமை' ஏகாதிபத்யம்!

இரண்டு உயிர்கள்—ஒரு ஆணும் பெண்ணும் — பிணமாகி இருக்க வேண்டும்; ஆனால் பிழைத்துவிட்டார்கள்!

ஓடிக்கொண்டிருந்த ரயிலிலிருந்து, அஞ்சாது, இருவரும் குதித்தனர்—எனினும் தப்பிவிட்டனர்.!

உலக வாழ்வு பொல்லாதது இனி உயிர் விடுவது தவிர வேறு வழி இல்லையென்ற எண்ணத்தால் அல்ல, இருவரும், குதித்தது!

தற்கொலையென்றால் என்னவென்றுகூட அறியமுடியாதபருவம் —ஏழுவயது, அந்தப்பெண்ணுக்கு!

வாழ்க்கையை இன்பமாகக் கழிக்க வேண்டிய இளமை கொழிக்கும் 19 வயது, அந்த வாலிபனுக்கு!

எனினும், இருவரும் அஞ்சவில்லை —ஓடும் ரயிலிலிருந்து குதித்தனர்!

சம்பவம் நடந்த 20ந்தேதியன்று சென்னைக்கருகிலுள்ள சேவ்வாப்பேட்டை என்ற இடத்தில் நிகழ்ந்ததாகும்!

நிகழ்ச்சிக்குக் காரணம்—நான்கு படி அரிசி!

மனித சமுதாயத்தின் இளமைச் செல்வங்கள் இரண்டு, உயிரைக் கூடத்திரணமென மதித்து, ஓடும் இரயிலிலிருந்து குதிக்கத் தூண்டியது—கேவலம், நான்கு படி அரிசி!!

பெரம்பூரைச் சேர்ந்த கஸ்தூரி பாய் என்ற சிறுமி சென்னைக்கு வந்துகொண்டிருந்தாளாம்—பக்கத்தில் நான்குபடி அரிசி நிரம்பிய ஒரு சிறுமூட்டையோடு! தொழுவூரைச் சேர்ந்த மாரிமுத்து எனும் வாலிபன் அவள் அருகில் வந்து அமர்ந்தானும்—அவள் அயர்ந்திருந்த சமயம் பார்த்து, செவ்வாப்பேட்டைக்கருகே, திடீரென அந்த அரிசிமூட்டையை எடுத்துக்கொண்டு — ஓடும் இரயிலையும் பொருட்படுத்தாது குதித்தானும்! தற்செயலாக இதைக் கண்ட சிறுமியும், 'ஐயோ அடித்துக்கொண்டு போகிறானே' என்று அலறியவண்ணம் அவனோடு குதித்தாளாம்!!

வயலிலே நின்றுகொண்டிருந்தோர் சிறுமியின் கூச்சலைக் கேட்டு ஓடிவந்து 'திருடனை' பிடித்திருக்கின்றனர் — போலீசார் அவனை கைது செய்திருக்கின்றனர்!

நான்குபடி அரிசி—ஒரு வாலிபனை சிறைக்குள்ளே பூட்டிவிட்டது!

சிறுமியை, ஓடும் இரயிலிலிருந்து உயிர்போகுமே என்றுகூட எண்ணாமல் குதிக்கச் செய்திருக்கிறது!!

X X X

நெஞ்சைக் கலங்கவைக்கும் இந்த நிழ்ச்சிச் சித்திரம்—நாட்டின் நாலு பக்கங்களிலும் மக்கள் வாழ்வில் வளர்ந்துவரும் வேதனைநிலைக்கோர் எடுத்துக்காட்டு.

அரிசிப்பஞ்சம் — வேதனைப்படுவோரது இதயங்களை எத்தகைய சூழ்நிலைக்கு இழுத்துச் செல்கிறது என்பதற்கோர், விளக்கம்.

கிடைத்துவிட்டது எப்படியாவது தப்பிவிடுவோம் என்று ஆசை உந்த அவன் குதித்திருக்கிறான்.

'ஐயோ! அது போய்விட்டால் என் செய்வது?' என்று அலறிக்கொண்டு அவள் குதித்திருக்கிறாள்.

அரிசிப் பஞ்சம் — இருதயத்தை இரும்பாக்கி, அச்சத்தைத் துச்சமெனத்தள்ளி, ஆகாத பாதையாயினும், அதில் இறங்கச் செய்திருக்கிறது, அவர்களை — பொன்விளையும் நாடெனப் போற்றப்படும் இங்கு, வாழப்பிறந்தவர்களை!

அந்த அளவுக்கு நாட்டிலே, உணவுப் பஞ்சம் கோர உருவெடுத்திருக்கிறது. 'இல்லை! இல்லை'! என்ற துயர கீதமும், "தொல்லை! தொல்லை!!" என்கிற சோகப் பாடலும் நஞ்சையும் புஞ்சையும் நிறைந்த இந்நாட்டின், மக்கள் மன்றத்தில் எதிரொலிக்கத் துவங்கிவிட்டன!

வாழப்பிறந்த மக்கள், தங்கள் வாழ்நாளைக் கழிக்க, வயிற்றுப் பசியைப் போக்க வகையில்லையேயென வாடுகின்றனர் — வறுமைக் கழுகு தன் கூர்மையான நகங்களோடு மக்களை நோக்கிப் பாயத்துவங்கி விட்டதால்!

X X X

அரிசி—தென்னாட்டில் வாழும் மக்களது முக்கிய உணவுப்பொருள். ஆயிரமாயிரம் பொன்னைவிட ஆளுக்கொரு கவளம் அன்னமிட்டால் அதுவே போதும்—என்று கூறுவார்கள், கிராமப்புறங்களில்.

எத்தனை வகையான உணவுவகைகளையிட்டாலும் தென்னாட்டுமக்களைத் திருப்திசெய்து விடமுடியாது—சிறிதாவது சோறு போடாமல்!

அரிசி — அவ்வளவு இன்றியமையாத முக்கிய உணவுப்பொருள். அதற்குப் பஞ்சம் வந்திருக்கிறது, ஆட்சியாளர் அலறுகின்றனர்—என்ன செய்வது என்று விழிக்கின்றனர்—8-அவுன்சை 7-அவுன்சாக்கியாவது சமாளிக்கலாம் என்று முடிவு செய்திருக்கின்றனர்!

வளஞ்செறிந்த நாடு, தென்னாடு எனினும் வறுமை தலைவிரித்தாடுகிறது — அரிசிக்காக உயிரையும் இழக்குமளவுக்கு நெஞ்சத்தை, துணியச் செய்கிறது!

ஏன் இது? — பருவமழையில்லை, விளைச்சலில்லையென்று கூறுகின்றனர் ஆளவந்தார். உண்மை' பருவக்கோளாறு பயிர்த் தொழிலை வெகுவாகத்தான் பாதித்து விட்டது. இயற்கையைப் பிடித்திழுத்துவந்து 'மழையே பெய்வாய்!' என்று கட்டளையிட எந்த சர்க்காராலும் இயலாதுதான்.

இயற்கை மோசம் செய்து விட்டமைக்காக இந்த மந்திரிமார்களை நோவதால் பலனுமில்லை — பொருளுமில்லை. ஆனால் விளைச்சல் கெட்டுவிட்டதே தவிர ஆளவந்தார்களுக்கு விவேகமும் இலலாமற் போய்விட்டது என்று எண்ணமுடியாது!

மாகாணத்தின் உணவு நெருக்கடி குறித்து என்ன செய்வது என்று சில தினங்களுக்குமுன் மாகாண உணவு ஆலோசனை போர்டாரை கலந்து ஆலோசிக்கும்போது மாகாண உணவமைச்சர் பேசியிருக்கிறார்,

> உணவு நெருக்கடி அதிகமாகிவிட்டது. இதைப் போக்க இரண்டு வழிகள்தான் உள்ளன. ஒன்று கொள்முதலை

விருத்தி செய்வது! இரண்டாவது அதிக உணவுப்பொருளை அனுப்புமாறு மத்திய சர்க்காரைக் கோருவது — ஆனால் இந்த இரு வழிகளாலும் நமது உடனடிப் பிரச்னை தீர்ந்துவிட முடியாது

என்ற கருத்துடன். மாகாணத்தில் உணவு நெருக்கடியென்றால், அதைத் தீர்க்க மத்திய சர்க்காரை நோக்கி 'தவம்' கிடக்கவேண்டிய நிலையிலிருக்கின்றனர் மாகாண சர்க்கார்.

மத்திய சர்க்காரோ, கையில் பணமில்லையென்று காரணஞ்சொல்லி வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில்லையென்று சங்கற்பம் செய்து கொண்டிருக்கின்றனர்.

ஆகவே, சுயதேவைப்பூர்த்தி என்ற பெயரால் இந்தியாவுக்குள்ளேயே விளையும் உணவுத் தானியங்களைக்கொண்டு நிலைமையைச் சமாளிக்க முயல்கின்றனர்.

* * *

இந்தியா ஒரு நாடல்ல—பலமாதிரி பழக்கவழக்கங்கள் கொண்டோர் வாழுமிடம் என்று சொல்லி வருகிறோம்! உணவு விஷயத்தில்கூட இந்தியா முழுமையிலும் ஏகோபித்த ஒற்றுமையைக் காண முடியாது! இங்கு நமக்கு ஜீவாதாரமான உணவுத்தான்யம் அரிசி — ஆனால், வடநாட்டு வாழ்வினரின் முக்கிய உணவுப்பொருளோ கோதுமை!

ஆகவே, உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது உதவுவீர்! என்று மாகாண சர்க்கார் கோரினால் மத்திய சர்க்காரிலிருந்து முதலில் மிரட்டல்தான் பதிலாகக் கிடைக்கிறது!

பின், அதிக நெருக்கடி, நிலைமை ஆபத்தாகிவிடும் என்று அபயக் கூச்சல் எழுப்பினால் 'உதவி' வருகிறது உதவாத முறையில்!

அண்மையில் மத்திய சர்க்கார் மாகாண சர்க்காருக்கு அதிகப்படியாக 2½ இலட்சம் டன் உணவுப் பொருள் அனுப்புவதாக முடிவு செய்திருக்கிறது—அந்த 2½ இலட்சம் டன்னில்,

1 இலட்சம் டன்—கோதுமை
1¼ இலட்சம் டன்—மைலோ
30,000 டன்—அரிசி.

எவ்வளவுதான் முயன்றாலும், ஏழைகளால அரிசியைத் தவிர வேறு எதையும் தங்களுக்கேற்ற உணவுப் பொருளாக மாற்றிக் கொள்ள முடிவதில்லை—வசதி படைத்தவர்கள் தங்களுக்குத் தரப்படும் கோதுமையை பற்பல விதமான பலகாரங்களாகச் செய்து சாப்பிடுகின்றனர்! கூழுக் கலையும் குப்பனால்—பலவித பட்சணங்கள் செய்ய வசதியேது? அது மட்டுமல்ல. அரிசியைத் தின்று வயிறு நிரப்பிய அவனால் வேறு எதையும் போட்டு பசியை அடக்குவதென்பது—அவ்வளவு எளிதாகவும் இல்லை!

எனினும் இந்த உண்மையை மறந்துவிட்டு மத்திய சர்க்கார் 'கோதுமை'யை அனுப்புகிறார்களே யொழிய 'அரிசி' அதிகமாக அனுப்புவதில்லை!

காரணம், அவ்வளவு அரிசி விளைச்சலும் அங்கில்லை'—அப்படி ஏதாவது பிறமாகாணங்களிலிருந்து வாங்கியனுப்பினாலும், அதற்கு பல மடங்கு அதிகமான விலை கொடுக்க வேண்டியிருக்கிறது — இதன் விளைவாக மாகாணத்தின் வரிப்பணம் விரயமாகிறது!

அண்மையில் மணு ஒன்றுக்கு ஆறணா அதிகம் வைத்து விற்குமாறு பங்கீட்டுக் கடைக்காரர்களுக்கு மாகாண சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்! அரிசியின் விலையை அதிகமாக்கி—விற்குமாறு கட்டளை பிறப்பித்திருக்கின்றனர்.

மக்களுக்குக் கிடைக்கும் அரிசியின் அளவும் 8-லிருந்து 7-அவுன்சாக்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் அரிசியின் விலையும் மணங்கு ஒன்றுக்கு ஆறணா அதிகமாக்கப்பட்டிருக்கிறது.

ஏழை—தன்வயிறு நிரம்பும் வழி கிடைக்குமா என்று ஏங்கித் தவிக்கிறான். ஆனால், அவனது 'ஏக்கத்தை' தீர்க்கப் போவதாக சிங்கநாதம் செய்து ஆட்சிபீடமேறிய இவர்களோ, முன்பு கிடைத்த அரிசியையும் குறைத்துவிட்டு, முன்னைவிட இப்போது அரிசியின் விலையையும் உயர்த்தியிருக்கின்றனர்.

காட்டில் நடக்கமுடியவில்லையென்று கஷ்டப்படுபவனை காட்டாற்றில் தள்ளிவிட்டு, கூடவே முதலையையும் ஏவிவிடுவது போலிருக்கிறது — ஆளவந்தாரின் போக்கும், புது உத்தரவும்!

அரிசி விலையை அதிகமாக்க நேர்ந்ததன் காரணத்தை ஆராய்ந்தால் வேதனைவிரியும். சென்னை மாகாண சர்க்கார், அரிசிதேவையென்று அபயக்குரல் எழுப்ப மத்திய அரசாங்கம் ஐக்கிய மாகாணத்திலிருந்து அரிசி வாங்கியனுப்பியது. அப்படி அனுப்பப்பட்ட அரிசியின் விலை ஒன்றுக்கு — பல மடங்காம்! இதன் விளைவாக சென்னை சர்க்காருக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்டமாகியிருக்கிறது.

மக்களின் வரிப்பணத்திலிருந்து ஒருகோடி ரூபாய் — ஐக்கிய மாகாணத்துக்கு அநாவசியமாகப் போக வேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்த நஷ்டத்தை ஈடுகட்டவேண்டியவர்களாகி விட்டார்கள் மாகாண சர்க்கார். அதை முன்னிட்டு இப்போது மணு ஒன்றுக்கு ஆறணா அதிகம் வைத்து விற்குமாறு கட்டளை பிறப்பித்திருக்கின்றனர் கடைக்காரர்களுக்கு!

இந்தியாவுக்குள்ளேயேயிருக்கும் இன்னொரு மாகாணத்துக்கு இந்த மாகாண மக்களின் பணம் கொள்ளை போகிறது — கொள்ளை கொடுத்த சர்க்காரோ அதை ஈடுகட்ட மக்கள் மீது சுமத்துகின்றனர் விலை உயர்வை!

X X X

**அரிசி கேட்டால் கோதுமை கிடைக்கிறது!**

**தப்பித்தவறி அரிசி கிடைத்தாலோ நமது வரிப்பணம் அநாவசியமாகக் கொள்ளை போகிறது!!**

வேடிக்கையான இந்த நிலை, எவருக்கும் வேதனையைத் தரத்தான் செய்யும்.

அரிசி—அகில உலகிலும் அஸ்தமித்துப்போய் விடவில்லை! பக்கத்திலே பர்மா இலட்சக்கணக்கான டன்களைத் தரும் நிலையிலிருக்கிறது — நெற்களஞ்சியமாம் சையாம் கேட்டால் தர காத்திருக்கிறது!

ஆனால், நம்மை ஆளவந்தவரோ வெளிநாட்டிலிருந்து, உணவுப் பொருள் இறக்குமதியாகாமல் செய்யவேண்டும் என்று சொல்லி, வேதனையைச் சிருஷ்டிக்கின்றனர்!

விளைச்சல் இல்லை, உணவுப் பஞ்சம் ஏற்படும் என்ற அறிகுறி தோன்றினுல், எங்கு உணவுப் பொருள் கிடைக்குமோ அங்கிருந்து வரவழைத்து நிலைமையைச் செம்மையாக்குவதுதான்— ஒரு அரசாங்கத்தின் கடமையாகும். ஆனல் நம்மை ஆளும் மாகாண சர்க்காரோ பஞ்சத்துக்கான அறிகுறி தோன்றியதும், அதைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரமில்லாததாக இருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்தோ அல்லது வெளி மாகாணங்களிலிருந்தோ தனக்குவேண்டிய உணவுப்பொருள்களைப் பெறக்கூடிய அதிகாரம் மாகாணங்களுக்கு கிடையாது.

ஆகவே, இங்கிருக்கும் ஆளவந்தார் 'டெல்லி'யை நோக்கித்தெண்டனிடவேண்டியிருக்கிறார்கள். 'டெல்லி'யிலுள்ளவர்களோ தங்களைப்போலவே இங்குள்ளோரையும் நினைத்து 'கோதுமை'யை அனுப்புகின்றனர் — அதிகம் வலியுறுத்திஞல் ஒன்றுக்குப் பத்துமடங்கு விலையில் மட்டரகமான அரிசியை வாங்கி அனுப்பி வைக்கின்றனர்!

இதைவிடக் குறைந்த விலையில், நல்ல முறையில் அரிசியை இறக்குமதி செய்யமுடியும்! பர்மா, சையாம் முதலான இடங்களிலிருந்து.

ஆனல், மத்திய சர்க்காரிலிருப்பவர்களோ 'பணமில்லை! பணமில்லை!!' என்று கூறிக்கொண்டு வெளிநாட்டிலிருந்து மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வரவழைக்கத்தயங்குகின்றனர்.

மத்திய சர்க்கார் இட்டதே கட்டளை என்று எண்ணிக்கிடக்கும் மாகாண சர்க்காரும் 'ஆமாம், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாதுதான்' என்று சொல்லிக்கொண்டு, பல்லிளித்து நிற்கின்றனர் —தேசிய ஸ்தோத்திரம்' பாடுகின்றனர்' மக்கள் தந்த வரிப்பணத்தைக் கரியாக்கிவிட்டு மீண்டும் மக்கள் வாழ்விலேயே கை வைக்கின்றனர்!

X X X

எல்லோரும் இந்தியர், இது நமது ஜென்ம பூமி என்ற ஸ்தோத்திரப் பாடலில் மூழ்கியவர்களாக மாகாண சர்க்கார் இருப்பதால்—மத்திய சர்க்காரின் போக்கைத் திருத்தும் திறமையோ அல்லது தன் மாகாண மக்களின் நல்வாழ்வுக்கு அடிகோலும் வழிவகைகளைச் செய்யவோ வக்கற்றிருக்கிறது!

பாதுகாப்பு—படாடோபம் என்ற பெயரால் பணத்தை வீணுக்கும் மத்திய சர்க்காரோ வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைக்கப் பணமில்லையென்று கூறுகிறது!

அதையே சாக்காக வைத்து அதிக 'கோதுமை'யை அனுப்பி வைக்கிறது! அதை மறுக்கமுடியாத மாகாண சர்க்காரோ 'கோதுமையும் பட்சணங்களும்' என்ற பிரச்சாரத்திலீடுபட எண்ணுகிருர்களேயொழிய மக்கள் நிலையை எடுத்து மேலிடத்துக்கு விளக்குவோம் என்று எண்ணுவதில்லை! விளைவு —"கஸ்தூரிபாய், — மாரிமுத்து"க் காட்சிகள் நாட்டில் அதிகரிக்கத் துவங்குகின்றன. மக்கள் வாழ்வில் வேதனை விரிகிறது —அதிகப் பணம் கொடுத்து அரிசி வாங்க வேண்டியவர்களாகிருர்கள் உதவாத கோதுமையை வாங்கி வைத்துக் கொண்டு திண்டாட வேண்டியவர்களாகிருர்கள். இத்திண்டாட்டமும் திகைப்பும் மாற, மாகாண சர்க்கார் உணவுப் பொருள்களை வரவழைக்கவும் மக்களுக்கு வழங்கவுமான நேரிடை அதிகாரம் உரியவர்களாக ஆகவேண்டும். அப்போது 'கோதுமைக் கொடுமை'க்கு ஆளாகவேண்டிய அவசியமோ அல்லது அதிகப் பணம் கொடுத்துவிட்டு மக்கள் 'தலையில் கை வைக்க' வேண்டிய அவசியமோ இல்லாமற் போகும்!

அரிசி, அபரிமிதமாகக்கிடைக்கும் பர்மா, சையாம் முதலான நாடுகளிலிருந்து குறைந்த விலையில் வரவழைத்து, மக்களுக்குத் தர இயலும்.

அத்தகைய நிலை யேற்பட்டால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய 'பணமில்லையே!' என்று பாடப்படும் பல்லவி இல்லாமற் கூடச் செய்துவிட முடியும்.

எப்படியெனில் கடந்த போரின் போது நாம் பிரிட்டனுக்கு உதவிய பணம், 'ஸ்டர்லிங் கடன்' என்ற பெயரில் கோடிக் கணக்கிலிருக்கிறது.

அந்தக் கடனை, இத்தகைய நற்காரியத்துக்குத் துணிந்து செலவிடலாம். ஆனல், மத்திய சர்க்காரோ 'பஞ்சப் பாட்டு' பாடுவதிலிருக்கிருர்களே யொழிய பயன் தரத்தக்க பாதையைக் காண முயற்சிக்கவில்லை! வீம்பைப் பெரிதெனக் கொள்கின்றனர் — வெளிநாட்டிலிருந்து எதையும் இறக்குமதி செய்யப் போவதில்லையென்று 'பெருமை' பேசித் திரிகின்றனர்!

இதனல், அவதிக்கும்—கஷ்டத்துக்கும் ஆளாவோராக நாமிருக்கிறோம்! இந்த இழிநிலை போக்க, ஏதாவது மாற்றம் கண்டால்தான் மக்களிடையே மகிழ்ச்சி மலர முடியும்! அரிசி 'இல்லை'யென்ற அவலக் கூச்சல் மறைய முடியும்!

இல்லையெனில், 'கோதுமை ஏகாதிபத்யம்' நம்மையும் நம் வாழ்வையும் கொள்ளை கொள்ளத், துடித்துத் தவிக்க வேண்டியதுதான்!

*

6-ம் பக்கத் தொடர்ச்சி

சமரசந்தழைக்கப் பாடுபடும் எங்கள் மீது உன்போன்ருரை 'பார், பார்! வகுப்புத் துவேஷி, என்று ஏவிவிடுகின்றனர்! நீயே யோசித்துப் பார்! நாங்கள் வகுப்புநீதி வேண்டுமெனக் கோருகிறோம்—நமது மொழி வளர வழி வேண்டுமென்கிறோம். அவர்கள் என்ன கூறுகிருர்கள்.......?"

"ஏனப்பா மீண்டும் ஆத்திரத்தைக்கிளப்புகிருய் — அதுதான் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கூடாது—ஏகபோக உரிமை நீடிக்க வேண்டுமென எகத்தாளம் போடறதுகளே!"

"இதற்கு என்ன பெயர் — பிடிவாதமாகத் தனது காரியத்தைச் சாதிக்க முனைவதற்கு என்ன பெயரிட்டழைப்பாய்!"

"வெறி பிடித்திருக்கிறது என்று பொருள்"

"ஆமாம்' வெறியர்கள் என்றுதான் தேசிய இதழ்களும் இந்த 'கூவத்துக் கும்பல்' — பத்திரிகை 'பயில்வான்'களைப் பற்றித் தீட்டியிருக்கின்றன. இந்த வெறிதீர வீண் கூச்சல் பயன் தந்துவிடாது. விவேகம் பிறக்கவேண்டும் — அவர்களது இதயங்களில்! கூவுதலும் கூப்பாடும் மறுமலர்ச்சி யுகத்தை மறைத்து

விடாது—தெரிகிறதா? இது, அவைகள் மனதில் படும்படி செய்ய வேண்டும்"

"ஆமாம்! 'கூவத்தாரே கூவாதீர் என்று கூறிவிட்டு வருகிறேன் என்று சொல்லிக்கொண்டே ஓடினான் —கொஞ்சம் துணிச்சல் உள்ள நல்லான், என் நண்பன்—தேசியத் தோழன்!

✻

## முகப்பில்!

போரின் கோரவாயிலிருந்து தப்பிப் பிழைத்த இந்த அவனி, அமைதியை நிலைநாட்டி, ஆதிக்க வெறியை விரட்டியடித்து, நாடுபிடிச் சண்டை மோகத்திற்குச் சீட்டு கொடுத்துவிட்டு, புதியதொரு நிலையை — அமைதி, சாந்தம், அண்டை நாடுகளோடு நெருங்கிய உறவு, நினைத்ததற்கெல்லாம் கெடுபிடி, கனத்த குரல், மீசைத் துடிப்பு, மின்னல் வேக அறிக்கை, புயல் போக்கிலே பேச்சு, பொறி பறக்கும் கணைகள், படபடக்கும் கரங்கள், வெட்டு, குத்து, தாக்கு, ஆக்ரமி என்ற ஆவேச நடை...இல்லாத, இருக்க முடியாத, ஏற்பட வேண்டாத நிலையை—ஏற்படுத்த உலக நாடுகளில் முன்வரிசையிலே நிற்கிற அமெரிக்கா, பிரிட்டன், சீனு, பிரான்ஸ், ரஷ்யா ஆகியவை ஒன்று கூடி ஐ. நா. சபையை அமைத்தனர்.

ஆதிக்கவெறியென்ற நஞ்சு புகுந்து உலக நாடுகள்மீது பரவியிருந்த யுத்த ஆவேசம் என்ற தீராத படைநோயைப் போக்கும் அரு மருந்து ஐ. நா. சபை என்று அமைதி ஆர்வலர்கள் எண்ணினர்.

ஆம், இனிப் போர் என்ற பெயரையே அகராதியிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்றுகூடப் பேசினர். அதற்குத தக்கதோர் நல்வாய்ப்பு இந்தக் கூட்டு அவையென்று நினைத்தனர். நம்பினர்.

ஆகவேதான் அந்தச் சபையில் எல்லா நாடுகளும் அங்கம் பெற ஆவல் கொண்டன. அப்படியே இடமும் பெற்றன. உலகத்தின் நிலையை, போக்கையே மாற்றும் பலப்பல உயிர்ப் பிரச்சனைகள் அதன் முன் கொண்டுவந்து வைக்கப்பட்டன.

பாலஸ்தீனத்திலே கொந்தளிப்பா—கொண்டுபோ, அந்தப் பிரச்னையை ஐ. நா. முன்பு என்றனர். தென் ஆப்பிரிக்காவிலே தகராறு—ஐ. நா. சபை தலையிட்டு முடிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். காஷ்மீரக் காய்ச்சலா, சரி, அனுப்பு ஒவன்டிக்சனை அரிய அரசியல் சூரணம—மாத்திரை தரட்டும் என்று ஐ. நா. சொல்கிறது.

இத்தகைய எரும் பிரச்சினைகள் பலவற்றிலே தலையிட்டு ஐ. நா. சபை தனது 'அமைதி நாடு படலத்தை', வெற்றியோடு முடிக்க முழுமூச்சாக வேலை செய்தது—செய்கிறது...

ஆனால்......

சீனப் பிரச்சினை இன்று கொழுந்துவிட்டெரியும் செந்தீயைப் போலாகிவிட்டது. கம்யூனிஸ்ட் சீனாவின் பிரதிநிதி இருக்கவேண்டிய இடத்தில், விட்டுவிட்டுப் பாய்ந்தோடும் தத்துக்கிளியைப் போல ஓடி ஒதுப்புறமாய்க் கிடக்கும் சியாங்—கே—ஷேக்கின் பிரதிநிதி இருப்பதை எதிர்க்கிறது ரஷ்யா. ஆனால் அமெரிக்காவோ, 'ஆகா, அப்படியா...கூடாது இந்தப் போக்கு' என்று கூவுகிறது! உலகறிந்த ஒரு உண்மைக்கு எதிராக நின்று கொண்டு கனல் தெறிக்க, கண்டனக் குரல் எழுப்புகிறது, ட்ரூமன் சர்க்கார்!

இரண்டு பக்கமும் தீ...இடையே சிக்கிய எறும்பு......ட்ரிக்வி—லீ—ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசி தத்தளிக்கிறார்!

அகில உலகத்து அமைதியை நிலைநாட்ட ஐ. நா. சபை ஏற்பட்டது. ஆனால் இன்று சீனத்துச் சிக்கலால் சுக்கு நூறாகிவிடும் போலிருக்கிறது!

அமெரிக்கா தன் பிடிவாதத்தைத் தளர்த்துவதாகத் தெரியவில்லை! ரஷ்யாவோ, ஐ. நா. சபையின் உட்கழகங்களின் ஒவ்வொரு நடவடிக்கையிலும், தனது எதிர்ப்பைக் காட்டத் தவறுவதில்லை. ஓடிப் போக வேண்டிய கோமிண்டாங் பிரதிநிதி இருக்கும் காட்சியைக் கண்டாலே சீறுகின்றது. சினங்கொள்கின்றது. வெளியேறிடவும் செய்கின்றது!

அமெரிக்கா, இத்தச் சீனக் கொந்தளிப்பிலே காட்டும் பிடிவாதமோ தாங்கக் கூடியதாக இல்லை! வாக்கெடுப்பு நடந்தால், எதிர்த்தோ, ஆதரித்தோ வாக்களிக்காதாம் அமெரிக்கா! பிரான்சும், எகிப்தும் இன்னமும் தங்கள் எண்ணத்தை எடுத்துச் சொல்லவில்லை — தயங்குகின்றன! அமெரிக்கா தன் இன்றைய நிலையை மாற்றிக்கொண்டால் அதன் குடியரசு நாடுகளும் மாசேதுங் சீனாவை மனமார ஆதரிக்கும். ஆனால் அமெரிக்க அடம் அடங்காது—அதன் பிடிவாதம் போகாது போலிருக்கிறது! அதன் காரணமாக ஐ. நா. சபையிலே ஏற்பட்டுள்ள முடக்குவாதம் வலுத்துக்கொண்டே போகிறது. பிடிவாதம் வரவே, முடக்குவாதம்! முடக்குவாதம் வரவே, துன்பகீதம் இசைக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உலகுக்கு!

சோவியத் சர்க்கார் தாங்கள் தோல்வியைத் தழுவ நேர்ந்தால் பிரிந்தேவிடுவர் எல்லா ஐ. நா. சபையின் தொடர்புகளிலிருந்தும்! — இது மட்டும் உறுதியிலும் உறுதி!

பிறகு என்ன நடக்கும்? இப்பொழுதே கம்யூனிஸ்ட் சீனாவை ஆதரிக்க என்று ரஷ்யாவின் தலைமையில் சில நாடுகள் சேர்ந்து ஒரு பக்கமும், ஆதரிக்கக்கூடாது என்றும் அமெரிக்காவின் 'வாலர்களாக' உள்ள நாடுகள் ஒரு பக்கமும் ஆக இரு தரப்புகள் உருவாகிக் கொண்டே வருகின்றன! ஆகவே ரஷ்யா சமாதானத்தின் பேரில்தான் ஒரு தனியான அமைப்பு ஏற்படுத்த முனையும். பிறகு சமாதானத்திற்காகச் சண்டை—அமைதியின் போரால் அடிதடி நடக்கும்!

ஆனால் அமெரிக்கா — தன் பிடிவாத வாளால் பிரிந்து கிடந்த நாடுகளை இணைக்கப் போட்டுள்ள ஐ. நா. என்ற பெரியதொரு பாலத்தை வெட்டிப் பிரித்து விபரீதத்தை விதைத்து, வேதனையை அறுத்து, வீண் குழப்பத்தை விருந்தாக்கிடுமோ என்று அமைதி நாடுவோர் அஞ்சுகின்றனர். அதை விளக்குவதே நம் இதழின் முகப்புச் சித்திரம்!





ஜூன் 24 முதல்
சென்னை
பாரகன் & பிராட்வே
மற்றும் தமிழ் நாடெங்கும் ஆரம்பம்.........
ராஜா — கோயமுத்தூர்
ஸ்டார் — திருச்சி
பாலஸ் — சேலம்
யாகப்பா — தஞ்சாவூர்
டயமண்ட் — கும்பகோணம்
ராயல் — திருநெல்வேலி
நடராஜா — காரைக்குடி
ஜோஸப் — தூத்துக்குடி
ராஜா — காஞ்சிபுரம்
நாஷனல் — வேலூர்
சீதாராம் — விழுப்புரம்
முத்தையா — கடலூர்
ரத்னா — பாண்டிச்சேரி
மாடர்ன் தியேட்டர்ஸ்
மந்திரி
குமாரி
டைரக்ஷன்
டி.ஆர்.சுந்தரம் &
எல்லிஸ் ஆர்.டங்கன்
கதை வசனம் கருணாநிதி
கனல் தெறிக்கும் வசனம்
அனல் தெறிக்கும் நடிப்பு...

## இளங்கோவின் சபதம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

[எல்லோரும் கூட்டமாக இளங்கோவடிகள் வாழ்க என்று வாழ்த்து முழக்கம் எழுப்பியவண்ணமே செல்கின்றனர்]

### காட்சி 3.

காலம் — மாலை

இடம் — இளங்கோவடிகள் தங்கியிருந்த தனியான வனம்.

இருப்போர் — இளங்கோவடிகள், செங்குட்டுவன், ஊர் மக்கள், நிமித்திகன்.

[ஊர்மக்கள் கவியைக் கண்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். நிமித்திகன் நுழைகிறான்.]

நி:- நமஸ்காரம்.

இ:- அடடா..................பழைய நிமித்திகரா?

[அடிகள் கேலியாகச் சிரிக்கிறார்.]

நி:- ஆம், பழைய நிமித்திகன் -ஆனால் புதிய புத்தித் தெளிவுடன்!

இ:- கேட்டீரா, உமது சோதிடம் பொய்த்துப்போன சேதியை... பார்த்தீரா, எனக்கு இருந்த ராஜபோகம் என்னவாயிற்றென்று!

நி:- எடுபிடியாக இருந்தேன் — இதுநாள்வரை! சொந்த சிந்தனையைத் தூரத்தே தூக்கி வைத்திருந்தேன். தெளிவு பெற்றேன். இப்பொழுது தேடியும் வந்திருக்கிறேன் தங்களை — எனக்குப் புதிய வாழ்வளிக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ள!

செ:- நிமித்திகரே, தம்பி நாடாளாவிட்டாலும், கவியுலகையேகொடி கட்டி ஆளுகிறான்! காப்பிய உலகு அவன் தாளினைத் தொழுது நிற்கிறது!

இ:- உமது சாத்திரத்தில் இல்லாத ராஜயோகம் என் அண்ணனுக்கு—ராஜயோகம் மட்டுமல்ல, வீரயோகம்—வீரயோகம் மட்டுமல்ல, வெற்றியோகம்! கண்டு களித்திருப்பீரே!

நி:- அடிகளே, பழைய தவறை மன்னியுங்கள், — என்னையும் தங்களோடு இருக்கக் கருணை காட்டுங்கள்!

இ:- நான் மதகுரு அல்லவே!

நி:- மதகுருவாக இல்லாமலிருக்கலாம்—ஆனால் மனித குல குருவாக இருக்கிறீர்கள். அப்படி இல்லாவிட்டாலும் எனக்கு எப்படியும் தாங்கள் குரு—வழிகாட்டி!

இ:- தங்களின் இந்தப் போக்கைக் கண்டால் புரோகிதபுரி சீறுமே! வேதமோதிகளின் உலகு வெகுண்டெழுமே!

நி:- அதைப்பற்றிய கவலை எனக்கில்லை—அந்தச் சிந்தனை தங்களுக்கும் தேவையில்லை!

இ:—நான் பௌத்தத்தைப்பாராட்டியிருக்கிறேன். சைனத்தை இனிய கொள்கைகளின் இருப்பிடம் என்று ஏற்றிப் போற்றியிருக்கிறேன். வைணவத்தை வாழ்த்தியிருக்கிறேன். சைவத்தையும் தள்ளிவிடவில்லை—என் காவியத்தில்' ஆகவே எம்மதமும் சம்மதம் என்ற எண்ணங்கொண்டவனாயிற்றே நான்!

நி:- அதுவே, எனக்கு நிம்மதி தருவது!

இ:- நன் காவியமுடைக்காரன்—என்றாலும் பிற காண்டல போக்கிகள் பலரும் கண்டு நடுங்கும் கருத்துகளைச் சொன்னவன்.

நி:- அத்தனையும் தெரிந்தேதான் வந்திருக்கிறேன்.

இ:- என் காவியத்திற்கு காப்பு பாடியபோது கூட கடவுள்களைக் கூவியழைக்கவில்லை.

சே:- திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்! மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்! பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும்!......என்றுதான், பாடியிருக்கிறான், தம்பி!

இ:- நிமித்திகரே, குறிப்பாகக் கவனியுங்கள்—இயற்கையை வணங்கவில்லை, போற்றியிருக்கிறேன். தொழவில்லை, வாழ்த்தியிருக்கிறேன்! உங்கள் போக்குக்கு இது மிகமிக எதிர்த் துருவமாயிற்றே!

நி:- நான் தங்கள் அடிமை!

இ:- அடிமையென்ற சொல்லே எனக்கு எட்டிக்காய்!

நி:— எந்தப் பெயரிட்டழைப்பீர்களோ, எனக்குத்தெரியாது! என்னை எப்படியும் ஏற்கவேண்டும்.

இ:— சரி, இதுநாள்வரை நீர் நம்பி வந்தவை, தவறானவை என்று உணர்ந்துவிட்டீர்!

நி:- ஆம், ஆம்!

இ:- என் கருத்துகள் உமக்கு வேம்பல்ல, வெல்லப் பாகு — அப்படித்தானே நீர் கூறுகிறீர்?

நி:— ஆகா...சந்தேகமில்லை!

இ:— அப்படியானால், நீர் என்னோடு இருப்பதைக் காட்டிலும், இன்னும் உம்மைப்போல பழைய ஏற்பாடுகளை, எண்ணங்களை நம்பிக் கொண்டுள்ளவர்கள் ஆயிரமாயிரம் —உம் குலத்தில், இருக்கிறார்களே! அவர்களுக்கு நீர் சொல்லும் அந்தத் தொண்டைச் செய்யுங்கள்—இன்று முதல், உம் வாழ்நாள் முடியும்வரை!

செ:— அதுதான் நல்ல தீர்ப்பு இந்த ஞானோதயம் பெற்ற நிமித்திகருக்கு!

[நிமித்திகன் சிலைபோல நிற்கிறான் ... கொஞ்சநேரம் மௌனம் நிலவுகிறது!]

நி: - அடிகளே, தாங்கள் ஒரு ஒளிவிளக்கு' என் மனமருளை, மதியிருளை விரட்டிவிட்டீர்கள். அதற்காக நன்றி செலுத்த என்றென்றும் கடமைபட்டுள்ளேன். எவ்வளவு எதிர்ப்புவரினும் தங்கள் கருத்துகளை எங்களவர் இடையில் பரவப் பெரும்பாடுபடுவேன்......

[நிமித்திகன் வெளியேறுகிறான்]

செ:- காவியுடைக் கவியானாலும், நீதான் இப்புவிக்குப் பொருத்தமான பூபதி!

இ:- ஆகவேதான், நான் தங்களை நியமித்து விட்டேன்! இது இந்தப் பூபதியின் கட்டளை—ஆகவே மீறாமல் மேற்கொள்ளுங்கள். நிமித்திகனும் புத்தி பெற்றான்!

[இளங்கோவடிகள் புன்முறுவல் பூக்கிறார். சேரன் விடை பெறுகிறான்]

*

இதுதான் அண்ணல்

# இராம இராஜ்யம்!

"விஜயா! வீணாக்காதே நேரத்தை—வெட்டிப் பேச்சு, வீண் பிரசங்கம் இவைகளில் காலத்தைக் கழித்து விடாதே! இப்போதே இங்குள்ளோர் உன்னையும் என்னையும்பற்றி என்னென்னவோ உளற ஆரம்பித்து விட்டனர். புரிகிறதா?"

"தெரிகிறது — அதனால்தான் கொஞ்சம் திட்டம் போட்டு வேலை செய்கிறேன். அடிக்கடி பெரிய ஆட்களையெல்லாம் சந்திக்கிறேன்—நிருபர்களோடு நீண்ட நேரம் பேசுகிறேன்!"

"விஜயா! ஒரு சந்தோஷ சமாச்சாரம் தெரியுமோ—இப்பொழுது இங்கிருந்து அமெரிக்காவுக்கு நிறைய புடவைகள் ஏற்றுமதியாகிறதாம்—எல்லாம் உன்னால்தானென்றுகூட பலர் பேசுகிறார்கள்!"

"என்னண்ணா, இது! ஏற்றுமதிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? வியாபார விஷயங்களில் நான் அவ்வளவு தலையிடறதில்லையே!"

"இந்திய நாட்டின் புடவைகள் மீது அமெரிக்க மாதர்களுக்கு அதிக மோகம் பிறந்திருக்கிறதாம் — அதனால் சில மாதங்களாக நிறைய புடவைகள் ஏற்றுமதியாவதாக வர்த்தக இலாகாவிலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது"

"ஓ அப்படியா! அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"

"என்ன விஜயா, அப்படி கேட்கிறாய்? உன் போட்டோவுடன் வருகிற பேப்பரைப் பார்த்தாலே போதுமே! அடடா! என்ன பளபளப்பாயிருக்கு தெரியுமோ உன் சேலைகளும், ஜாக்கெட்டுகளும்!"

"போண்ணா—உனக்கு எப்போதும் பரிகாசம்தான்! சாதாரண சேலை கட்டிக்கணுமாக்கும்நான்—அதுசரி! அடிக்கடி என் போட்டோக்கள் கிடைக்கிறதா அண்ணா, உங்களுக்கு?"

"கிடைக்காமலிருக்குமா! நீ, நான் அனுப்பிய யானைக்குட்டிகளை......"

"நானே நேராக இருந்து, கண்காட்சி சாலையினரிடம் ஒப்படைத்தேன். சாதாரணமாக அல்ல! ஒரு சிறு வைபவமே நடத்தினர்—பலர் வந்திருந்தனர்—நான் கூட பேசினேன்!"

"பேசினையா? அதுபோன்ற சந்தர்ப்பங்களை விடக்கூடாது. ஆமாம், என்ன பேசினாய்-என்னைப்பற்றி..."

"இல்லை! உன்னைப்பற்றி நானே புகழ்ச்சியாகப் பேசலாமா? ஆகவே என் அண்ணன் அனுப்பி வைத்தது என்று அவ்வளவு வலியுறுத்திச் சொல்லவில்லை. பிரதமர் அனுப்பி வைத்தார்—அமெரிக்கக் குழந்தைகள்மீது தனக்கிருக்கும் அன்புக்கு அடையாளமாக இவைகளை இந்தியப் பிரதமர் அனுப்பிவைத்தார் என்றுதான் பேசினேன்"

"இவ்வளவுதானா? இது, இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே வளரும் பரஸ்பர நல்லெண்ணத்தின் அறிகுறி......"

"பேசினேன்! பேசினேன்! அதை படங்கூடப் பிடித்தார்களே, அமெரிக்க சர்க்காரின் செய்தி இலாகாவினர்!"

"சரி! அரசாங்கக் காரியங்களையெல்லாம் அப்போதைக்கப்போது கவனிக்கிறாயா? அல்லது பேட்டி, பேச்சு, டாக்டர் பட்டம்......இப்படியே பொழுது போய்க்கொண்டிருக்கிறதா?"

"எல்லாவற்றையும் கவனிக்காமலிருப்பேனா? இப்போதுகூட இராஜாங்க மந்திரியை எப்போது சந்திக்கலாம் என்றுதான் கேட்டுவரச் சொன்னேன். அதற்குள் நீங்கள் டெலிபோன்மூலம் கூப்பிடுவதா, காரியதரிசி சொன்னார்......"

"ஆமாம், விஜயா! அவசரமாகத்தான் கூப்பிட்டேன். இந்த இக்ரமுல்லா அங்கே வந்திருக்கிறாராமே!"

"யாரு?"

"இக்ரமுல்லா!—அவர்தான் விஜயா, பாகிஸ்தான் வெளிநாட்டிலாகா காரியதரிசி. அங்கே வந்து அமெரிக்க மந்திரிகளைச் சந்தித்து நிறைய ஆயுதத்தளவாடப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வர ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாராமே?"

"யார் சொன்னா? அப்படியொன்றும் தெரியலியே!"

"எப்படித் தெரியமுடியும்—உனக்குத்தான் பொழுதுவிடிஞ்சாலேட்டி, பொழுது போனா பிரசங்கம்னு ஏதாவது ஒரு இழவு இருக்கே....எங்கே இதையெல்லாம் கவனிக்கமுடியும்!"

"ஏன் அண்ணா? என்னைக் கேலி செய்கிறயே, உன் கதை என்னவாம்? அமெரிக்கா வந்துபோய் ஒரு வருஷம்கூட ஆகலே......அதற்குள் எத்தனை ஊர் சுற்றிவிட்டே, எத்தனை தடவை பிரசங்கமாரி பொழிஞ்சிருக்கே...ஏன் அண்ணா, இந்தோனேஷியாவுக்குப் 'போகிறபொழுது ஏதோ 'சமுத்திராஜன் தர்பார்' ஒன்று நடத்தினார்களாமே, கப்பலோட்டிகள்! அந்த விசாரணையில் கூட, நீ, நீளமாப் பிரசங்கம் செய்யக்கூடாது என்று 'தண்டனை' தரப்பட்டதாமே!"

"விஜயா! விளையாட இது நேரமில்லே—நிஜமாத்தான் கேட்கிறேன் நீ அமெரிக்காவுக்கு ராஜதூதராக இருக்கிறே—அங்கேயும் இங்கேயும் அலைஞ்சிகிட்டு, விஷயத்தைக் கோட்டைவிட்டா, என்ன ஆகிறது? இப்பொழுதே, இங்கே பேச ஆரம்பித்துவிட்டார்கள், தங்கை என்பதனாலே சகல வசதிகளும் தந்து, நான் உன்னை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்திருக்கிறதா! நீ அவுங்க கூச்சலை உண்மையாக்கிடுவேபோலிருக்கு சர்க்கார் காரியமென்றால் சமத்து வேண்டாமோ? ராஜதந்திரியாக இருக்கவேண்டாமோ? இல்லேன்னாலும் என்னென்ன நடக்கிறது என்பதாவது தெரிஞ்சிருக்க வேண்டாமோ?"

"அதிகம் வளர்த்தாதே அண்ணா! நிருபர்கள் வேறே காத்திண்டிருக்கா—நேற்று கண் விழிச்சது வேறே

உடம்பை வலிக்குது — விஷயத்தை வேகமாகச் சொல்லு!"

"சொல்றேன்! வீணு பேசிகிட்டேயிருந்தா நேரமும் வளருது. அப்புறம் யாராவது ஒரு அதிகப் பிரசங்கி 'தங்கையுடன் ஏன் நமது பிரதமர் அன்று அவ்வளவு நேரம் டெலிபோன்லே பேசினரு. சொந்த விவகாரமா அல்லது ராஜாங்க விஷயமா?' என்று பார்லிமெண்டில் ஒரு கேள்வி போட்டாலும் போடலாம்!"

"என்னண்ணு பரிகாசம் செய்றே! உன்னைத் துணிஞ்சு கேட்கிற அளவுக்கு யாரண்ணு இருக்கிறு—எதிர்க்கட்சிகூடத்தான் எதுவுமில்லே! எதிர்த்துப் பேசத் துணிவுள்ளவங்கதான, நமக்கொரு மந்திரி 'சான்ஸ்' அடிக்காதா என்று இருக்கிறுங்க—எதிர்த்துப் பேசத்தான் ஒருத்தர் கூட இல்லையே!"

"அதனுலேதான் விஜயா, ஆபத்து அதிகமாகிவிட்டது. எதிர்க் கட்சி என்ருல்தான் கவலை இல்லையே—எதிர்த்து யாராவது பேசினுல் ஒரு கை பார்த்துவிடுவேனே—இதைப் பற்றி சமீபத்தில் திருவனந்தபுரத்திலே பேசுகையில் ஒரு பொதுக் கூட்டத்திலேகூட வெளியிட்டிருந்தேனே—"நல்ல எதிர்க்கட்சி வேண்டும்" என்று—நீ படித்தியோ? அமெரிக்கப் பத்திரிக்கையிலே போட்டிருந்தார்களோ?"

"தேடிப் பார்க்கிறேன்"

"தேடிப் பார்க்கிருயா—சொன்ன மட்டும் கோபம் வருகிறதே! என் விஜயா, தினசரி 'பேப்பர்' பார்க்கக் கூடவா உனக்கு நேரம் இல்லே! வயசு 50 ஆகப் போகிறது—அப்படித்தான் என்னத்தை வாரிக் கொட்டறயோ, தெரியலே!"

"மறுபடியும் ஆரம்பிசசுட்டியே! விஷயத்தைச் சொல்லண்ணு—நாக்குள்ளேயே என் இந்தத் தகராறு—எதிர்க்கட்சி இல்லாததனுலே..."

"நம்மைச் சேர்ந்தவர்களே நம்மை எதிர்க்க ஆரம்பிச்சுட்டா — நான் செய்கிற காரியங்களிலெல்லாம் அது தப்பு, இங்கே குறை என்றெல்லாம் சொல்ல ஆரம்பிச்சுட்டா!"

"அப்படியா! உன்னைக் குறை சொல்கிற ஆட்கள் கூடவா உண்டாகிவிட்டா காங்கிரசிலே. வேடிக்கையாஇருக்கண்ணு—பட்டேல சுமமா விடமாட்டாரே, பல்லைப் பிடுங்கிடுவாரே அதுபோல ஆசாமிகளை!"

"ஆமாம் — பிடுங்கிடுவார், நான் ஏமாந்தா என் பல்லையே! போ, விஜயா! விஷயத்தைத் தெரிஞ்சுக்கணும் என்கிற ஆர்வமே உனக்குப் போய்விட்டது. சொந்த நாட்டிலே என்ன நடக்கிறது என்பதுகூட தெரியவேணுமோ? பட்டேல் இருக்கிறரே, அவர்தான் என்னை எதிர்க்கிற ஆசாமிகளுக்கு குரு!"

"யாரு? பட்டேலா, துணைப் பிரதமரா?"

"ஆமாம்! ஏன் திகைக்கிறே—மத்தாய் இருந்தாரோல்லியோ—அவர்தான் நிதி மந்திரி ஸ்தானம் வகிச்சாரே, அவர்! விலகிவிட்டார். பின், தான் விலகியதுபற்றி ஒரு அறிக்கை வெளியிட்டார்-அதில் என் போக்கு பிடிக்கவில்லை யென்றும், அதனுலே விலகிவிட்டதாகவும் சூசகமாகச் சொன்னர். உண்மையும் அதுதான்! என் இஷ்டப்படி அவர் ஆடவில்லை யென்று எனக்குக் கொஞ்சம் அவரைப் பிடிக்கலைதான்..."

"அதனுலே..."

"விலகிவிட்டார். பார்லிமெண்டிலிருந்துகூட ராஜினமா செய்துவிட்டார் என்ருல் எவ்வள ஆத்திரம் இருக்கும் என்று பாரேன்! அப்படிப்பட்ட ஆசாமியை-என் போக்கு சரியில்லை யென்று பட்டவர்த்தனமாக வெளியிட்ட ஆசாமியை..."

"எதிர்த்து பட்டேல் எதுவும் அறிக்கை விடவில்லையோ?"

"எங்கே விட்டார் நம்ப ஆசாத் ஒரு எதிர் அறிக்கை விடுத்தார், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதைப்போல!"

"அதுதான் ஆயாச டுகிருயா?"

"அதுமட்டுமில்லை விஜயா! மத்தாய், மூட்டை முடிச்சுகளோடு டெல்லியைவிட்டு போகிறபொழுது போயிருந்து அவரை ஆகாய விமானத்தில் ஏற்றி வழியனுப்பிவைத்தது யார் தெரியுமோ?"

"பட்டேலா..."

"ஆமாம்! சாக்ஷாத் அவரும் அவரது சகாக்களும்தான் இதுபோல ஏராளம் உண்டு விஜயா, இதையெல்லாம் கேட்டா நீ வருத்தப்படுவாய். ஆகையினுலே நம்ப கவுரவம் நிலைக்கிறப்போலே நடந்துகொள்ளணும் கொஞ்சம் புத்தி தீட்சணியத்தோடே விஷயங்களை அணுக வேணும் — நாலு பேர் ஏதாவது சொலலிவிடும்படியா நடந்துகொள்ளக்கூடாது!"

"சரி, அண்ணு! இப்படி உனக்கும் அவருக்கும் தகராறு என்கிற சங்கதி வெளியே தெரிந்தால ரொம்ப மோசமாப் போய்விடுமே விவகாரங்களெல்லாம்"

"அதுவரைக்கும் கொஞ்சம் நிம்மதிதான். அவ்வளவு மோசமாகிவிடவில்லை இன்னும். ஆனுலும் இந்தச் சூக்ஷ்மத்தைப் புரிந்தவா, தெற்கே பலபேர் இருக்கிருர்களாம்!"

"எப்படி அண்ணு தெரியுது?"

"நம்ம சந்தானம் — அவர்தான் ரயில்வே மந்திரி (போல) இருக்கிருரே, கோபாலசாமி அய்யங்காருக்கு வேண்டியவர்—தெற்கே போயிருந்தார், தன் மகன் கல்யாணத்துக்கு! அப்பொழுது, சிதம்பரம் என்கிற ஊரிலே, 'மந்திரி சபையில் கருத்து வேற்றுமை, பிளவுகள் எதுவும் கிடையாது' என்று பேசி இருக்கிருர்—பேப்பர்லே படித்தேன். சந்தானம் நமக்கு வேண்டியவர். எங்கப்பன் குதிருக்குள் இல்லேன்னு அவரா சொல்வாரோ?"

"ஆமாம்! யாராவது சில விஷமிகள் விஷயத்தை சூட்சமமா புரிஞ்சுண்டு ஏதாவது கேள்வி கேட்டிருப்பா!"

"அதுதான் நானும் நினைச்சேன்"

"சரியண்ணு! நேரமாச்சு. என் என்னை அழைத்தாய் — வேகமாச் சொலலு!"

"இக்ரமுல்லா, பாகிஸ்தான் சார்பில் அமெரிக்க சர்க்காரைச் சந்தித்து, தங்களுக்கு நிறைய ஆயுத வெடிப் பொருள்களை வாங்கிக்கொண்டு போவதற்காக வந்திருக்கிருராம்."

"அப்படியா!"

"ஆகையினுலே, உடனே நீயும் அக்கலையையோ அல்லது அதற்கு வேண்டியவர்களையோ சந்தித்து இந்தியாவுக்கும் நிறைய ஆயுதத் தளவாடங்களை வாங்கியனுப்ப ஏற்பாடு செய்யணும். இது ரொம்ப முக்கியம். உடனே செய்! செய்கிருயா?"

"ஆகட்டும்! ஆனுல் வாங்குகிற ஆயுத தளவாடப் பொருள்களுக்

(அடுத்த பக்கத்தில்)

# கூவத்தாரே, கூவாதீர்!

"குள்ளநரியின் ஊளை, கோட்டானின் அலறல் ஆரம்பமாகிவிட்டது. கூவத்தார் கூவுகிறார் — சுற்றி நிற்கும் சுண்டெலிகள் 'சூது, இது பொல்லாது. நம் சுக வாழ்வு இனி நில்லாது' என்று ஒத்தூதுகின்றன! ஓரே ஆபாசக் களம் — எனினும் அமைத்துவிடப் பாடுபடுகின்றனர்! வெறி, தனது கோரவாயைத் திறந்து கொண்டு கொக்கரிக்கிறது! காதுகளிலே வைரம் மின்ன, கனத்த உடல் காரிலே அசைய, கனஜோரான பட்டும் பீதாம்பரமும் உடலிலே நெளிய, கஷ்டப்படாது, காலாட்டிய வண்ணம் ஜீவிக்கும் கனதனவான்களின் காவலனாக இருக்கும் இக் 'காகிதப் பீரங்கிகள்' கர்ஜிக்கத் துவங்கிவிட்டன!

'புலி'யாகிவிட்டோமாம்—புல்லைத் தமது போஜனம் தரும் 'புண்ய சரக்காக'க்கொண்டோரின் பிரதிநிதிகள் பேசுகின்றன! சூறாவளியாகிவிட்டோமாம்— சுயநல வாழ்வு பறிபோகிறதே என்ற பதட்டத்துக்கு ஆட்பட்ட இந்த 'பாரம்பரை சுகப்பிரமங்கள்' சொல்லுகின்றன!

சிங்கத்தின் குகையிலே சிறுநரி வாலாட்டியதாமே— அது போல இருக்கிறது, கதை! இந்தச் 'சிறுநரிகள்' சிம்மாதனம் ஏறியோரை சில்லரையாக மதிப்பதுமட்டுமின்றி இப்போது சீறவும் துவக்கிவிட்டனர்! பறிபோகிறதாம்—யார் வீட்டு அப்பன் சொத்தோ தெரியவில்லை!— அலறி அடித்துக் கொண்டு கிளம்புகின்றன! தவளை போல் கத்தக் குதிக்கும் ஆகாகனின் கூறுக்கலைப்பாட்டத்தைக் காண எனக்கு ஆத்திரம் வருகிறது—அதை மீறிச் சிரிப்பு வருகிறது — ஆண்மையும் மீறி வேதனை உருவாகிறது!

இதுகள் அடுப்பங்கரை அம்மாமிகளாக இருந்தால், நான் இத்துணை கவலை காட்டமாட்டேன்! ஆனால், அகில உலகையும் அறிந்ததாகக் கூறிக்கொள்ளுகின்றனவே! ஆப்பிரிக்க நிறத்திமிரைக் கண்டித்துத் தீட்டுகின்றனவே தீப்பொறி பறக்க! அத்தகைய 'ஆத்மாக்கள்' இத்தகைய 'எரிமலை'யாக குமுறுகின்றனர் என்பதை எண்ண எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது!

நினைத்தாலே நெஞ்சு கொதிக்கும் —நீதி வழங்குவது இந்த நெஞ்சமிலலார்க்குப் பிடிக்கவில்லைபோலும்! பாழடைந்த வீட்டில் பகற்கொள்ளையடிக்கத் திட்டம் தீட்டினுமே ஒரு சிந்தையிலாதவன், அதைப்போல நடந்துகொள்கின்றன! பாரேன் துணிச்சலை—வேண்டுமென்றே வழக்குத் தொடர்ந்திருக்கின்றனராம் அரசாங்கத்தின்மீது! வேடிக்கை என்பாய்—வேதனை நண்பா, வேதனை!!

கூழைக் குடித்து, கும்பிட்டுநின்று மலைச் சரிவு சென்று, மாடுகள் மேய்த்து, மண்வெட்டி தூக்கி,

(5-ம் பக்கம் பார்க்க

(முன் பக்கத் தொடர்ச்சி)

கெல்லாம் அப்போதைக்கப்போது பணம் தாணுமென்று அமெரிக்கர் கேட்பாளே!"

"கேட்பா! கேட்பா!! இனிக்கு பேசுவா —ஏதாவது சேட்டா புரண்டுவா! ஆகையினாலே தீர்மானமாகச் சொல்லு — எவ்வளவு கொடுத்தாலும் அவ்வளவுக்கும் பணம் கொடுத்துடறதா?"

"முடியுமோ, நாமாலே! ஏற்கனவே அதிக நிவைட்டாயிருக்கு நாம நிதி நிலைமை யென்று சொல்லிப் படலேனே—இங்க சாத்தியப்படுமோ? அவாளுக்கு அவ்வளவு நெருக்கடியில்லை—பணம் தாராளமா நடமாடறது, அதனாலே கஷ்டப்பட்டதைச் செய்யலாம்! அதோடு ஸ்டர்லிங் மதிப்புக்குத் தக்கபடி தங்கள் நாணய மதிப்பைக் குறைக்கலே அது, வேறே வசதி!......"

"ஆமாம்! என்ன செய்றது — விட்டுவிடமுடியுமோ—தயங்காதே— அக்கிஸனிடமமுதலில்நான 'கவலைப்' படுவதா தெரிவி. பின் தீர்மானமாகக் கூறு எவ்வளவு தந்தாலும் அவ்வளவுக்கும் பணம் தந்துவிடறதா? என்ன, செய்கிறாயா?"

X X X

"செய்கிறேன்! செய்கிறேன்!" என்று கூவினேன். முதுகில் பலமான அடி விழுந்தது! எதிரில், என்னை எழுப்பியவண்ணம் என் நண்பர் நின்றுகொண்டிருந்தார். பக்கத்தில் ஜூன் 17ந் தேதிய [illegible]து' பத்திரிகை கிடந்தது. "இன் [illegible]ய லட்சுமி பண்டிட் அமெரிக்க இராஜாங்கமந்திரி அக்கிஸனைச் சந்தித்து, பாகிஸ்தானுக்கு அதிகமாக ஆயுதத் தளவாடப் பொருளை அமெரிக்கா அனுப்பிவைப்பது குறித்து இந்தியாவுக்குள்ள 'கவலை'யைத் தெரிவித்தார்—எவ்வளவு விலையானாலும் கொடுத்துப பொருள்களைத் தாங்களும் வாங்கிக்கொள்வதாக வலியுறுத்திச சொன்னார்" என்று சற்று முன்பு நான் படித்த செய்தி நினைவுக்கு வந்தது. ✲

"சதிகாரச் சாமியார்"

ஆசிரியர்: — சேங்குட்டுவன்

சிறந்த பாராட்டுதல்கள் பெற்றது.

விலை 0—8—0

விற்பனையாளருக்கு 25% கழிவுண்டு

கிடைக்குமிடம்:—

V. கிருஷ்ணன்,
22. சுண்ணும்புக்காரத் தெரு,
காஞ்சிபுரம்.

Edited Printed & Published by C N. Annadurai M. A. at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.